விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378


# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சிறப்பு சலுகை
January 31 திகதி வரை மட்டுமே
ஆரோக்கியா
பல் வைத்தியசாலையின்
விசேட கட்டண சலுகையை
பெற்றுக்கொள்ள
இன்றே விரைந்திடுங்கள்.
Petrol Shed Lane, Nelliyady.
074 070 2241, 075 975 9828
(5389)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 15 வியாழக்கிழமை (28.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 040

## அத்துமீறும் இந்திய மீனவர்களுக்கு எதிராக யாழில் கண்டன ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)
இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி தொழிலில் ஈடுபடுவதை இந்திய மீனவர்கள் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியும், இலங்கை அரசிடம் நீதி கோரியும்யாழ்ப்பாணம்மாவட்ட கடற்றொழிலாளர்கள் நேற்று 19

## வட மாகாணத்தில் நேற்று 31 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
வடமாகாணத்தில் நேற்று 31 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.
யாழ்.போதனா வைத்திய சாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 677 பேரின் பிசிஆர் மாதிரிகள்பரிசோதனை 19

## வலம்புரிச் சங்குடன் முல்லைத்தீவில் இருவர் கைது

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் நேற்று காலை பெறுமதியான வலம்புரிச் சங்குடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
வலம்புரிச் சங் 19

### போர்க் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகள் மீது

# சர்வதேச குற்றவியல் விசாரணைகள் அவசியம்

## ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் வலியுறுத்து




(நியூ யோர்க்)
இலங்கையில் தமிழ்ப் பிரிவினைவாத மோதல்கள் மற்றும் போர்க் குற்றங்களில் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகள் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் வலியுறுத்தியுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனா தடுப்பூசி திட்டம் நாளை ஆரம்பம்

(கொழும்பு)
நாளை வெள்ளிக்கிழமை முதல் பொதுமக்களிற்கான கோவிட்-19 தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கவுள்ளது.
எனினும், 19

## தமிழரின் வழிபாட்டு அடையாளம் குருந்தூர் மலையிலிருந்து நீக்கம்

### பொலிஸில் முறைப்பாடு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் இருந்த தமிழர்களுடைய வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், அப்பகுதி கிராம மக்களின் சார்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடொன்றி 19

## 23 மேலதிக வாக்குகளால் யாழ்.மாநகர சபையின் பாதீடு நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாநகர சபையில் முதல்வர், சட்டத்தரணி வி.மணிவண்ணன் சமர்ப்பித்த 2021இற்கான பாதீடு 23 மேலதிக வாக்கு 19

## நெடுந்தூர பேருந்து நிலையம் யாழில் திறந்து வைப்பு



08

### வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வர ஆலய

## பூசகர் உட்பட மூவரும் பிணையில் செல்ல அனுமதி

(வவுனியா)
வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் தொல்பொருள் சின்னங்களை சேதப்படுத்தியதாக தொல்பொருள் திணைக்களத்தினால் வவுனியா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் 19

## வவுனியா தடுப்பில் 16 பேருக்கு கொரோனா

(வவுனியா)
வவுனியாவில் 19

## கொரோனாத் தொற்றால் மேலும் இருவர் பலி

### 60 ஆயிரத்தைக் கடந்த தொற்றாளர்கள்

(கொழும்பு)
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர்.
இதற்கமைய இலங்கையில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் மொத்த 19

### இலங்கைக்கு எதிராக

## புதியதொரு தீர்மானம் அவசியம்

சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் வலியுறுத்து

09ஆம் பக்கம் பார்க்க

## குருந்தூர் மலைக்குச் சென்ற தமிழரசு உறுப்பினர்கள்

### அச்சுறுத்திய இராணுவம்



(முல்லைத்தீவு)
தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், 19

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



பிறப்பு
29 – 07 – 1954

இறப்பு
01 – 01 – 2021

## கார்த்திகேசு கமலநாதன்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கமலநாதன் கடந்த 01.01.2021 (வெள்ளிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சின்னம்மா தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் பரிமளம் தம்பதியரின் மருமகனும் யோகராணியின் (லதா) அன்புக் கணவரும் லியோனின் பாசமிகு தந்தையும் தவமணிதேவி, சிவநாதன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.01.2021) வியாழக்கிழமை இலண்டனில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(5429)

45, கலட்டி லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

கா. சிவநாதன் (சகோதரன்)
077 773 7709

தகவல்:-
குடும்பத்தினர்

# முதற்கட்டமாக ஜனாதிபதி, பிரதமருக்கு கொரோனா தடுப்பூசி

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இன்று இலங்கைக்கு கொண்டு வரப்படும் கொரோனா தடுப்பூசி முதல் கட்டமாக ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கும், கோவிட்டுக்கு எதிராக போராடி வரும் சுகாதார பணியாளர்களுக்கும் செலுத்தப்படவுள்ளது.

"தடுப்பூசி ஏற்றும்- முதல் கட்ட நடவடிக்கையில் சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வழுங்கப்படவுள்ளது. இதில் முதல் கட்டத்தில் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களும் உள்வாங்கப்படவுள்ளனர். 2 ஆம் கட்டத்தின் கீழ் தொற்றை தடுக்கும் பணியில் ஈடுப்பட்டுள்ள இராணும், பொலிஸாருக்கு வழங்கப்படவுள்ளது. இதில் சுமார் 1 இலட்சத்து 20 ஆயிரம் பேர் வரை தடுப்பூசியை பெற்றுக்கொள்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர்
**திருமதி யோகராணி தில்லைநாதன்**
அவர்களின் அன்புத் தந்தை

## அமரர் தம்பையா சின்னையா



தோற்றம்
05.09.1927

மறைவு
26.01.2021

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

(4226)

பாடசாலைச் சமூகம்
யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்


# பிரமாண்டமான புதுக்கடைத் திறப்புவிழா

# GRAND *Opening*



## ஸ்ரீ குமரன் நகை மாளிகை
## *Sree Kumaran Jewellers*







என்னும் பெயரில் எமது புதிய ஸ்தாபனம்
இன்று தைத்திங்கள் 15 ஆம் நாள் 28.01.2021
(வியாழக்கிழமை) தைப்பூச நன்னாளில்
**காலை 09.36 மணி முதல் 10.36**
மணிவரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்
இல.74, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
என்ற முகவரியில் பிரமாண்டமாக
திறந்து வைக்கப்படுகின்றது.
எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இனிதே தங்கள் நல்வரவை நாடும்
**திரு.திருமதி செல்வகிருஸ்ணன் சாந்தலக்ஷ்மி குடும்பத்தினர்**

(5424)

No. 74, Main Street, Nelliyady, Karaveddy. ☎ 021 226 4465 / 077 873 3482

# வேலணை பிரதேச செயலரின் இடமாற்றத்திற்கு பொதுமக்கள் எதிர்ப்பு





(குப்பிழான்)

வேலணைப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் திடீரென இடமாற்றப்பட்டமையைக் கண்டித்து தீவகப் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று புதன்கிழமை காலை 9 மணி முதல் வேலணைப் பிரதேச செயலகம் முன்பாக அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

தீவகப் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மேற்படி கவனயீர்ப்புப் போராட்டத்தில் தீவகத்தைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் வேலணைப் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வேலணைப் பிரதேச செயலாளரின் திடீர் இடமாற்றத்திற்கு எதிரான சுலோகங்களைத் தாங்கிய வண்ணம் எதிர்ப்பில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மனு ஒன்றையும் கையளித்தனர்.(ஜ-18)

# 30/1 தீர்மானத்திலிருந்து இலங்கை விலகியமைக்கு ஐரோ.ஒன்றியம் கவலை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்திலிருந்து இலங்கை விலகியமைக்கு ஐரோப்பிய ஒன்றியம் கவலை தெரிவித்திருக்கும் அதேவேளை, பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் உள்ளடக்கங்களில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாகத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான கூட்டிணைந்த ஆணைக்குழுவின் 23 ஆவது சந்திப்பு இணைய வழியின் ஊடாக கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது இருதரப்பினரதும் அக்கறைக்குரிய பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது, இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் மக்களுக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பான விருப்பத்தை இருதரப்பினது பிரதிநிதிகளும் பகிர்ந்துகொண்டதுடன் வர்த்தக ரீதியான உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது. அதுமாத்திரமன்றி மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் சார்ந்த பிரச்சினைகளில் தொடர்ந்தும் இணைந்து பணியாற்றுவதன் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

மேலும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தல் மற்றும் சுகாதாரம், விவசாயம், சுற்றுலா ஆகிய துறைகளை மீண்டும் மேம்படுத்தல் ஆகியவற்றை இலக்காகக்கொண்டு ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட 22 மில்லியன் அமெரிக்க டொலர் உதவிக்கு நன்றியை வெளிப்படுத்திய இலங்கையின் பிரதிநிதிகள், தொற்றுநோய்ப்பரவலினால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்கு ஒன்றிணைந்த பல்தரப்பு முறைமையின் அவசியம் தொடர்பிலும் எடுத்துரைத்தனர்.

மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்திலிருந்து இலங்கை விலகியமைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் வருத்தம் தெரிவித்தனர். (ஜ-5)

# வாகனங்களுக்கான விலையுயர்வு

(கொழும்பு)

நாட்டில் தற்சமயம் வாகன இறக்குமதிகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் விற்பனைக்காக மீதமுள்ள வாகனங்களுக்கான விலை உயர்வடைந்து செல்வதனை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.

இந்நிலையில் வாகன இறக்குமதிகளை மீள ஆரம்பிப்பதற்காக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## பெறுகை அறிவித்தல்

## Chain Dozer பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக் கோரல்-2021

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேச சபை கொத்தியாலடி திண்மக்கழிவகற்றல் பகுதியில் காணப்படும் கழிவுகளை chain dozer மூலம் ஒன்று குவிப்பதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை |
|---|---|
| NP/14/41(15)/03/PC/01 | CHAIN DOZER மூலம் திண்மக்கழிவுகளை ஒன்று குவித்தல் |

1) சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ்.மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

2) சேவை வழங்குநர்கள் பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 29.01.2021 தொடக்கம் 11.02.2021 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா.2500.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

3) பெறுகை ஆவணங்கள் 12.02.2021 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு "தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

4) கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

க.தர்ஷன்
தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
0212240017
(C-1285)




தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியில் திறன் வகுப்பறை நேற்று திறந்து வைக்கப்பட்டது. இதில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.(படம்-கணேசலிங்கம்)



## பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

B.A.விரிவுரைகள் மீளவும் ஆரம்பமாகின்றன. பழைய நேர அட்டவணைப்படி விரிவுரைகள் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஆரம்பம்:- 30.01.2021 (8 மணி)

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
021 222 8148
(C-1286)

# கிரிக்கெட் விளையாட்டின் முன்னேற்றம் தொடர்பில் விசேட கலந்துரையாடல்



மஹேல ஜயவர்தன தலைமையிலான தேசிய விளையாட்டு பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் இலங்கை கிரிக்கெட் அதிகாரிகளுக்கும் இடையிலான விசேட பேச்சுவார்த்தை அண்மையில் இடம்பெற்றது.

இலங்கை கிரிக்கெட்டை அபிவிருத்தி செய்தல், பாடசாலை மட்டத்திலான கிரிக்கெட் விளையாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லல் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டது.

இவ்வருடம் நடைபெறவுள்ள லங்கா பிரீமியர் லீக்கில் இலங்கை வீரர்களுக்கு அதிக வாய்ப்புக்கள் வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள அனைத்து வயதுப் பிரிவுகளிலும் உள்ள வீரர்களுக்கும் பல வாய்ப்புகள் வழங்கப்படும் என்பதை தான் நம்புவதாக விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இதன்போது தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் தேசிய விளையாட்டுப் பேரவையின் உறுப்பினருமான குமார் சங்கக்காரவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(4)

# இலங்கை கிரிக்கெட் அணிக்கு புதிய முகாமையாளர் நியமனம்

இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய முகாமையாளராக ஜெரோம் ஜெயரத்னவை இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் நியமித்துள்ளது.

அதன்படி பெப்ரவரி மாதம் இலங்கை அணியின் மேற்கிந்தியத்தீவுகள் சுற்றுப்பயணத்தின் போது இலங்கை அணியின் முகாமையாளராக ஜெயரத்ன செயற்படுவார்.

தனிப்பட்ட காரணங்களினால் இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்று முடிந்த இரு டெஸ்ட் போட்டிகளுடன் அசந்த டி மெல், அணியின் முகாமையாளர் பதவியிலிருந்து விலகியதையடுத்து ஜெரோம் ஜெயரத்ன குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த பதவிக்கு மேலதிகமாக ஜெர்மி ஜெயரத்ன இலங்கை கிரிக்கெட்டின் தலைமை இயக்க அதிகாரியாகவும் பணியாற்றுவார்.

தொழில்முறை பயிற்சியாளரான ஜெயரத்ன முன்னதாக இலங்கை கிரிக்கெட்டில் தலைமை இயக்க அதிகாரியாக இருந்தார்.

இலங்கை அணிக்காக விளையாடும்போது பல சந்தர்ப்பங்களில் அணியின் இடைக்கால பயிற்சியாளராகவும் இருந்த அவர், சமீபத்தில் அணியின் ஆலோசகராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (4)

# 7 விளையாட்டு வீரர்களுக்கு பத்மஸ்ரீ விருது


இந்த ஆண்டுக்கான பத்ம விருது பெறுபவர்களின் பட்டியலை மத்திய அரசு கடந்த திங்கட்கிழமை வெளியிட்டது. இதில் பத்மஸ்ரீ விருதுக்கு 7 விளையாட்டு பிரபலங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்திய பெண்கள் கூடைப்பந்து அணியின் முன்னாள் கேப்டனும், தமிழகத்தை சேர்ந்த தலைசிறந்த வீராங்கனையுமான பி.அனிதா இந்த விருதுக்கு தேர்வாகியுள்ளது.

சென்னையில் வசித்து வரும் 35 வயதான அனிதா தெற்கு ரெயில்வேயில் அதிகாரியாக பணியாற்றி வருகிறார். இதேபோல் முன்னணி டேபிள் டென்னிஸ் வீராங்கனை மவுமா தாஸ், தடகள வீராங்கனை சுதாசிங், மலையேறுதல் வீராங்கனை அன்சு ஜாம்சென்யா, மல் யுத்த வீரர் வீரேந்தர் சிங், மாற்றுதிறனாளி வீரர் கே.ஒய். வெங்கடேஷ், பி.டி. உஷாவின் முன்னாள் பயிற்சியாளர் மாதவன் நம்பியார் ஆகியோரும் பத்மஸ்ரீ விருதை பெறுகின்றனர். (4)

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை துரைராஜா

### (இளைப்பாறிய தபால் அதிபர்)



*யாழ்ப்பாணம், வடமராட்சி, ஊரிக்காடு, நாவலடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய தபால் அதிபர் சின்னத்துரை துரைராஜா நேற்று (27.01.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசமணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - நாகம்மா தம்பதியரின் மருமகனும் ரூபவதி சகுந்தலாவின் அன்புக் கணவரும் ரகுகுமார் (லண்டன்), ரமேஷ்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வசந்தி (லண்டன்), யசோதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விகாஷ், அக்ஷரா ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் காலஞ்சென்ற கமலாதேவி, விசாகரத்தினம், உத்தரராசா, காலஞ்சென்ற மல்லிகாதேவி, தியாகராஜா, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் ஆசை அண்ணாவும் மகேஸ்வரராஜா, கணேசராஜா, காலஞ்சென்ற புவனேஸ்வரன், அழகேஸ்வரராஜா, விக்னேஸ்வரன், யசோதா, காலஞ்சென்ற நேசராஜா, அருச்சுனராஜா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் தர்ஷிகா, நிஷாந்தி ஆகியோரின் பெரியப்பாவும் காசிநாதன் (லண்டன்), அருந்தவராணி, புஸ்பராணி, அருந்தவராசா, புஸ்பராசா, பிறேமராணி, ரஜனி, சதாநாயகி, சரோஜினி, சாந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.*

*அன்னாரின் பூதவுடல் அவரின் அச்சுவேலி இல்லத்தில் இன்று (28.01.2021) வியாழக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் அவரின் பிறந்த இடமான ஊரிக்காடு இல்லத்தில் நாளை (29.01.2021) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று மயிலியதனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

ரகுகுமார் (மகன்) - 00447535228168
ரமேஷ்குமார் (மகன்) - 00447592478697
உத்தரராசா (தம்பி) - 076 369 8282
ஸ்ரீஸ்கந்தராஜா (தம்பி) - 077 744 0166

(C-1290)

தகவல்:
குடும்பத்தினர்

# அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து உறுதியான முன்மொழிவை முன்வைக்க வேண்டும்

## வேலுகுமார் அறைகூவல்

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பில் தொழிற்சங்கத் தரப்புகளில் இருந்து இன்னும் காத்திரமானதொரு வரைவு நகல் முன்வைக்கப்படவில்லை.

எனவே, அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து உறுதியானதொரு முன்மொழிவை விரைவில் முன்வைக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித்தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் அறைகூவல் விடுத்துள்ளார்.

கண்டி மாவட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் சிலருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளார். இது தொடர்பில் வேலுகுமார் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு,

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுப் பிரச்சினை என்பது உச்சக்கட்டத்துக்கு வந்துள்ளது. இந்நிலையில், முதலாளிமார் சம்மேளனம் உத்தேச சம்பள முன்மொழிவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து அதனை சந்தைப்படுத்தி வருகின்றது.

ஆயிரம் ரூபாவுக்கு மேல் வழங்குவதற்கு தயார் என்ற தொனியில் கூட பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது. ஆனால் கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் தொழிற்சங்கங்கள் தமது தரப்புத் திட்டத்தை இன்னும் சமர்ப்பிக்கவில்லை.

எவ்வாறு, எப்படி, எவ்வளவு சம்பள உயர்வை வழங்கலாம் என்பதற்கான சூத்திரம் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும். அதனை முன்னிலைப்படுத்தியே பேச்சுவார்த்தை இடம்பெற்றிருக்க வேண்டும்.

அதனை விடுத்து ஆயிரம் வேண்டும் என வாய் வார்த்தையில் மட்டும் மல்லுக்கட்டிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. மறுபுறத்தில் அரசாங்கமும் ஆயிரம் குறித்து கதைக்கின்றதே தவிர தமது உறுதியான, இறுதியான திட்டத்தை இன்னும் சமர்ப்பிக்கவில்லை.

இதனால் சம்பள உயர்வுக்கான சமரில் கம்பனிகளே முன்னிலை வகிக்கின்றன. தொழிற்சங்கங்கள் பலவீனமான கட்டத்தில் தான் உள்ளன என்பது புலப்படுகின்றது.

இதுவே கம்பனிகளுக்கு ஏதோவொரு விதத்தில் பலமாக அமையும். எனவே, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு விவகாரத்தில் அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றுபட வேண்டும்.

ஒரு மேசையில் அமர்ந்து பொதுவான, காத்திரமானதொரு சம்பள முன்மொழிவுத் திட்டத்தை உடன் தயாரிக்க வேண்டும்.

அதனை விடுத்து ஒவ்வொரு தரப்பும் வெவ்வேறான அறிவிப்புகளை விடுப்பதும் கம்பனிகளுக்கே சாதகமாக அமைந்து விடும். அதேவேளை, சம்பள உயர்வு குறித்து கவனம் செலுத்தும் நிலையில் தொழில்சார் உரிமைகளை வென்றெடுப்பதிலும் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சீனாவும் இலங்கைக்கு தடுப்பூசிகள் நன்கொடை

(கொழும்பு)

சீனாவிடமிருந்து இலங்கைக்கு நன்கொடையாக மூன்று இலட்சம் ஷினோபாம் கொவிட்-19 தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளதாக இலங்கைக்கான சீனத்தூதரகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடுப்பகுதியில் அவை இலங்கைக்கு வழங்கப்படும் என சீனத்தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த தடுப்பூசி தொகை வழங்கப்படுகின்றது. (ஜ-4)

## 36வது திருமண நாளில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிகள்

அமரர்.அப்பையா யோகநாதன்

(ஓய்வு நிலை யாழ்.மாநகர சபை ஊழியர்)

திதி:-28.01.2021



தோற்றம்:-01.07.1956

மறைவு:-08.02.2020

*ஒரு குடும்ப பாச விளக்காய்*
*ஒரு கூட்டுக் கிளியாக*
*எம்மோடு வாழ்ந்து*
*எம்மை எல்லாம் தவிக்க விட்டு*
*விண்ணுலகு புகுந்த உங்களை*
*நாம் எண்ணாத நாளில்லை.*

சென்.செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

மனைவி:சந்திரமலர், மருமகள்:ரவீந்திரன் மதனா
மற்றும் மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளை.
TP:077 258 1068

(5409)

# வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களை அழைத்து வர நடவடிக்கை எடுங்கள்

## பிரதமர் உத்தரவு

(கொழும்பு)

நாடு திரும்ப எதிர்பார்த்துள்ள வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

வெளிநாட்டில் பணிபுரியும் பணியாளர்களை நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் அலரிமாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டில் பணிபுரியும் ஏராளமான இலங்கை பணியாளர்கள் நாட்டிற்கு திரும்புவதற்கு முடியாமல் தவிப்பதாக இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய கொவிட்-19 தொற்றை கட்டுப்படுத்துவதற்கான ஜனாதிபதி செயலணியுடன் கலந்துரையாடி இப்பணியாளர்களை விரைவில் நாட்டிற்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் நம்பிக்கை வெளியிட்டார்.

இப்பணியாளர்களை அழைத்துவரும் பயணிகள் விமானங்களுக்கான அனுமதியை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளல் தொடர்பிலும் இதன்போது கவனத்தில் கொள்ளப்பட்டது.

இவ்வாறு அழைத்து வரப்படுபவர்களை தத்தமது இல்லங்களின் இடவசதிக்கேற்ப தனிமைப்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கான அனுமதியைப் பெற முடியுமா? என்பது குறித்தும் ஜனாதிபதி செயலணியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இதுவரை வெளிநாட்டில் பணியாற்றும் 32 ஆயிரம் இலங்கையர்கள் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளதுடன், மேலும் 22 ஆயிரத்து 483 பேர் தமது சொந்த நாட்டிற்கு வருகை தருவதற்கு எதிர்பார்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மரண அறிவித்தல்

## தெய்வேந்திரம் நாகேந்திரம் (வண்ணை தெய்வம்)

பிறப்பு 22 . 08 . 1950



இறப்பு 21 . 01 . 2021

*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் நாகேந்திரம் அவர்கள் கடந்த (21.01.2021) வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியையானது 29.01.2021 வெள்ளிக்கிழமை காலை 9 மணி 30 நிமிடம் முதல், 11 மணி வரை அன்னாரின் குடும்பத்தோர் மட்டும் கலந்து கொள்ளும் வண்ணம் அவரது இல்லத்தில் (france) இல் நடைபெற உள்ளது.*

*அதனைத் தொடர்ந்து மதியம் 12 மணி 30 நிமிடம் முதல் 2 மணி 30 நிமிடம் அனைத்து உற்றார், உறவினர், நண்பர்களின் பார்வைக்காக* Funerarium Villetaneuse: 5, Rue Marcel Sembat, 93430-Villetaneuse.France *முகவரியில் வைக்கப்பட்டு பின்னர் தகனம் செய்யப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.*

(5422) குடும்பத்தினர்

# கட்டட அனுமதி,ஆதன உரிமை மாற்ற விரைவு சேவைகள் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

**கட்டட அனுமதி மற்றும் ஆதன உரிமை பெயர் மாற்றம் என்பவற்றுக்கான விரைவு சேவைகள் யாழ். மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

யாழ்.மாநகர சபையின் வினைத்திறனான மாற்றத்தின் முதற்கட்டமாக கட்டட அனுமதி மற்றும் ஆதன உரிமை மாற்றங்களுக்கான விரைவு. சேவை நடைமுறைக்கு வந்துள்ளது.

யாழ்.மாநகர சபையின் பௌதீக திட்டமிடல் பகுதியால் வழங்கப்பட்ட கட்டட அனுமதி மற்றும் ஆதனவரி பகுதியால் வழங்கப்படும் ஆதன உரிமைப் பெயர் மாற்றம் என்பன ஐந்து வேலை நாட்களுக்கு உட்பட்ட விரைவு சேவைகளாக மாநகர முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணனால் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இச் சேவையில் கட்டட அனுமதியைப் பெற்றுக்கொள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் பூர்வாங்க திட்டமிடல் அனுமதியுடன் ஆதன உரிமையாளரின் பெயருடைய உறுதி, ஆதன வரிப் பற்றுச்சீட்டு , உரிமையாளரின் அடையாள அட்டைப்பிரதி, குழாய்க்கிணறு அறிக்கை,யாழ்.மாநகர சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நில அளவை வரைபடம், அற்றோனித் தத்துவக்காரர் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கான உரிய அற்றோனித் தத்துவம் என்பவற்றுடன் சகல உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் மற்றும் இச் சேவையில் ஆதன உரிமப் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ள குறித்த ஆதன இலக்கத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் அலுவலகத்திற்கு சமுகமளித்து வரி மதிப்பீட்டு பதிவேடுகளில் பெயர்களை உட்புகுத்துவதற்குரிய உரித்துறையின் வரலாற்றுத் தொகுப்பு படிவத்தினைப் பெற்று உரிய முறையில் பூரணப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் மாத்திரமே விரைவு சேவைக்குரிய விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும்.

விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்பட்ட தினத்தில் இருந்து 5 வேலை நாட்களுக்குள் தங்களுக்குரிய பதில் அளிக்கப்படும்.

யாழ்.மாநகர மக்களுக்கு சிறந்த வினைத்திறனான இலகுவான சேவையினை வழங்குவதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மாற்றங்களில் முதற்படியாக இம் மாற்றம் அமைகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-33)

## விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி நாளை 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் கந்தரோடை ஆலடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் ஆலய தரிசனம் நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு ஒலிபரப்பு செய்யப்படும். (5)

## லோக ஷேம சபாவேத சிவாகம குருகுலம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் லோட்டன் வேலக்கை பிள்ளையார் கோவிலடியில் அமைந்துள்ள ''லோக ஷேம சபா வேத சிவாகம குருகுலம்'' தொடக்க விழா இன்று 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்திய துணைத் தூதரக அதிகாரி ஸ்ரீ.மீ.கிருஷ்ணமூர்த்தி ஐயர் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர்களான பொ.பாலசுந்தரம்பிள்ளை, ப.கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக கொழும்பு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் வலி.மேற்கு பிரதேச செயலாளர் திருமதி.யசோதா உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில்நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நல்லை சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள், ஹவாய் தொண்டு நாத சுவாமிகள், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன்ஆகியோர்வாழ்த்துரைகளை வழங்குவர். (நி-5)

## பூங்கா திறப்பும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சடையாளி சித்தாமிர்த நட்சத்திரப் பூங்கா திறப்பு விழாவும் திருச்செல்வம் நவரத்தினம் எழுதிய சித்தரும்-சித்த தாவரங்கள் நூல் வெளியீடும் இன்று 28 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சித்தாமிர்த நட்சத்திரப் பூங்காவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வீ.கேதீஸ்வரதாஸும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வீரமங்கை ஸ்ராலினா யோகரத்தினம் கலந்து கொள்வர். (நி-5)

## வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப்பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றை மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்த தகடுகளை பெற்றுக்கொள்ள முடியும் என வடமாகாண போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் ய.பரந்தாமன் அறிவித்துள்ளார். (5)

## கட்டாக்காலி மாடுகளை பிடித்து மக்களுக்கு வழங்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து பிரதேச மக்களுக்கு வழங்க ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் உள்ள சுமார் ஆயிரத்து 500 வரையான கட்டாக்காலி மாடுகளே இவ்வாறு பிரதேசத்தில் உள்ள குடும்பங்களுக்கு தலா ஒரு மாடு வீதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து ஏலம் விடுவதனால் தீவகத்தின் இயற்கை சமநிலை பாதிக்கப்படும்.மதம் சார்ந்த பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படும் எனக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டமையால் கட்டாக்காலிகளை அதே பிரதேச மக்களின் வளர்ப்பிற்கு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கு வழங்குவதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (நி.5.4.30)



யாழ். பிரதேச செயலக நலன்புரிக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இரத்ததான முகாம் இடம் பெற்றது. (படம்:-ரவிசாந்)

## பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நாயன்மார்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான பாலஸ்தாபனம் இன்று 28 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.15 மணி முதல் 11 மணிவரையுள்ள சுப வேளையில் இடம்பெறும்.

பக்தர்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வருமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (5)

## தியாகராஜ சுவாமிகளின் 174 வது இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 174 ஆவது இசை ஆராதனை விழா இடம்பெறவுள்ளது.

இவ் இசை ஆராதனை நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை யாழ். கிளையிலிருந்து (இல.426 கே.கே.எஸ். வீதி, வண்ணை சிவன் கோவில் அருகாமை) பிற்பகல் 3.15 மணிக்கு ஆரம்பமாகும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-5)



யாழ்.செய்திகள்

## பாலஸ்தாபன அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வல்லை ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலய பிரதம பாலஸ்தாபன அபிஷேகம் இன்று 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.45 மணி முதல் 10.57 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும்.

எனவே ஆலயத்திற்கு வருகை தருவோர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியையும் பேணுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (நி-5)

# வங்கி ஊழியருக்கு கொரோனா

(கொழும்பு)

ஜா- எல பகுதியிலுள்ள வங்கி ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால், மீள் அறிவித்தல் வழங்கப்படும் வரை குறித்த வங்கி மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளருடன் தொடர்புடையவர்கள் இனங்காணப்பட்டு அவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என ஜா- எல பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

PEARSON INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Acadamic
IELTS General
IELTS Life skills.

#1 rated professional Lecturers
Weekday classess
Weekend Classess
Night Classess
# 100% Student focused.
Registered exam centre

Especially designed lessons for students who are willing to migrate foreign countries

idp IELTS
Register with us for IELTS Exam@ 29,999/=
0777 516 816-021 223 2250
infopearsonicollege@gmail.com (5417
No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, jaffnc

எமது புதிய முயற்சியின் ஆரம்பம் தைப்பூசத்திருநாளில்

யாழருவி புதிய சுவை அருவி




074 123 8122 /074 042 81 22 /021 042 81 22

## Flex Institute நிறுவனத்துடன் சேர்ந்து உங்கள் கனடா செல்லும் கனவினை நனவாக்குங்கள்.

விளம்பர விபரணம்

நீங்கள் கனடாவுக்குச் செல்வதைப் பற்றிய கவலையா? உங்கள் கனவை நாம் நனவாக்குகின்றோம். இலங்கையின் முன்னணி கனேடிய விசா ஆலோசனை நிறுவனங்களில் ஒன்றான நற்பெயரை **Flex Institute** நிறுவனம் கொண்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் கனடா செல்லும் விண்ணப்பதாரிகளுக்கு எமது சிறந்த சேவையினை வழங்கி அதன் மூலம் அவர்களின் விசா விண்ணப்பங்களின் வெற்றியை உறுதிப்படுத்துகிறோம். நாம் முக்கியமாக எமது கனேடிய விண்ணப்ப நிலையத்தின் மூலம் **Student Visa, a Student- Dependent, Open Work Permit, Visitor Visa, Visa Refusals, Family Visit Visa, Business Visit, and Super Visa Facilities** வழங்குகிறோம். இதற்கென்றே எமது அனுபவமிக்க தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்கள் உங்களுக்கான உதவிகளை செய்வதற்கு காத்திருக்கிறார்கள். எந்தவிதமான தங்குதடையோ, தாமதமோ இன்றி உங்களுக்கான விசாவினை கூடிய விரைவில் பெற்றுத் தருவதில் உத்தரவாதமளிக்கின்றோம். இதற்கென்றே அமைந்ததுதான் எமது **On The Spot Consultation** சேவை.

எமது வாடிக்கயாளர்களில் பலர் மாணவர் முதல் பிற பிரிவுகள் வரை அவர்களது விசா விண்ணப்பங்களை வெற்றிகரமாகப் பெற்றுள்ளனர். **University of Canada, West Algoma University, Fanshawege College, Centennial College, Seneca College, Georgian College, Cambrian College, ST. Laurence College, University of Saskatchewan, Lakehead University** போன்ற கனடாவிலுள்ள முன்னணி பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கல்வி கற்பதற்காக விசாவினைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகளை நேருக்கு நேராக வழங்குவதுடன் விசாவினை பெற்றுத்தர உதவுவதுடன் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் நிதி பின்னணி குறித்து கவனமாக அவதானித்து அவர்களின் விருப்பத்திற்கேற்ப கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் தேர்வு செய்ய நாம் உதவத் தயாராக உள்ளோம். எமது **Flex Institute** வாடிக்கையாளர், மாணவர்களின் மறுக்கப்பட்ட விசாக்களை பெற்றுத் தந்து அதன் மூலம் பலரது நன்மதிப்பையும் பெற்றுள்ளோம்.

ஆலோசனைகளை தவிர **IELTS** பயிற்சி நிலையம் ஒன்றினை அமைத்து ஆங்கில மொழியில் பரீட்சை **IELTS, Duolingo English Test, TOFEL and PTE (Academic)** பயிற்சி மற்றும் உதவிகளை செய்து தருகிறோம். ஒரு அனுபவமிக்க விசா நிறுவனமாக எம்மை நாம் உத்தரவாதம் அளிப்பதுடன் உங்கள் விசாவிற்கும் உத்தரவாதம் அளித்து உங்கள் கனேடிய கனவு நனவாகும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

- இலவச ஆலோசனை
- புலமைப்பரிசில்கள்
- 1000க்கும் மேற்பட்ட கல்வித்திடங்கள்
- **Student visa, Student Dependent, Business Visa, Family visit Visa, Super Visa requirements** சம்பந்தமான ஆலோசனை வழங்கப்படும்.

மேலும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு எம்மை தொடர்பு கொள்ள. 0777761346

**Flex Institute**
**6A, Parakumba Place, Colombo 06**
**Flexinstitute04@gmail.com**
**www.flexinstitute.lk**

எப்போ வரும் தூய அழைப்பு



விழித்திடு! புறப்படு! இளைஞர்களே! யுவதிகளே!

ஆதிசங்கரர், சுவாமி விவேகானந்தர், காஞ்சிப் பெரியார், ஆகிய மகான்களின் வழியில் நின்று...



இந்து தமிழ்க் கலாசாரத்தையும் பண்பாட்டையும் சிவபூமித் தேசத்தில் காப்பாற்றிட காவல் அரணாக நிற்போம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோரின் உதவிபெற்று தேவை நாடி நிற்பவர்களின் இருக்கும் இடம் தேடி உதவி புரிவோம்.

அன்பு, கருணை, அகிம்சை, வழியில் நின்று காத்திடுவோம்.


13 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களும் 45 வயதிற்கு மேற்பட்ட சகோதரிகளும் முன்வாருங்கள்

(C-1281)

077 390 1877

தலைவர்,
சைவப்பிரகாசப் பேரவை.

# மதுவரி திணைக்களத்தினரால் கசிப்புடன் ஒருவர் கைது



(கருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் நிலைய மது ஒழிப்புப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய கிளிநொச்சி பெரியகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரிடமிருந்து 35 லீற்றர் கசிப்பு, 350 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படும் உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப் பற்றப்பட்டன.

குறித்த நபர் மேலதிக விசாரணைகளுக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (நி-5-4-316)

# வட மாகாணத்தில் கொரோனாத் தடுப்பூசி முதலில் சுகாதாரத் துறையினருக்கு

(நல்லூர்)

வடக்கு மாகாணத்தில் மருத்துவர்கள், தாதியர்கள் உட்பட்ட சுகாதாரத் துறையினருக்கு வழங்க 10 ஆயிரத்து 400 பேருக்கு கொவிட் -19 தடுப்பூசி டோஸ்கள் தேவை என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.


முதல் கட்டமாக சுகாதாரத் துறையினருக்கு கொவிட் -19 தடுப்பூசி வழங்கப்படும் என சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்பட்டது.

வடமாகாணத்தில் கொவிட் -19 தடுப்பூசி வழங்கப்பட வேண்டிய சுகாதாரத் துறையினரின் விபரங்களை சுகாதார அமைச்சுக் கோரியிருந்தது.

அதனடிப்படையில் மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட மருத்துவ சேவையாளர்கள், ஊழியர்கள் என 9 ஆயிரத்து 400 பேர் வடமாகாணத்தில் கடமையாற்றுகின்றனர்.

அவர்களுடன் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மருத்துவ கல்வியாளர்கள், மருத்துவ பயிற்சியாளர்கள் என ஆயிரம் பேருக்கும் சேர்த்து 10 ஆயிரத்து 400 பேரின் விபரம் சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (நி-5-33)

# மாற்றுத்திறனாளிகளை சுயமுயற்சியாளர்களாக ஊக்குவிக்கும் செயலமர்வு



(பனிக்கன்குளம்)

மாற்றுத்திறனாளிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் அவர்களை சுயதொழில் முயற்சியாளர்களாக உருவாக்கும் செயலமர்வு மாவட்ட செயலக மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தினால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் மாங்குளம் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பை உருவாக்குவதனூடாக அவர்களை சுய தொழில் முயற்சியாளர்களாக உருவாக்கும் நோக்கில் குறித்த பயிற்சிப்பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் பிரதான வளவாளராக மாவட்ட செயலக கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் பு.றமணன், மாவட்ட செயலக மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் செயலமர்வில் குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளான 45 சுயதொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டனர். (நி-5-4-281)

# தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச சபையின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் வட மாகாண ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது என தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ். சிவசிறி அறிவித்துள்ளார். (நி-5)

# மாகாண சபை இயங்காமையால் அபிவிருத்தியில் பெரும் பின்னடைவு

## பிரதேச சபைத் தவிசாளர்

(சாவகச்சேரி)

கடந்த இரண்டரை வருட காலமாக மாகாணசபை உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்தியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகச் சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாம தேவன் சுட்டிக்காட்டியுள்ளார். நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

பிரதேசசபைகளின் அபிவிருத்தி மாகாணசபைகளில் தான் தங்கியுள்ளது. மாகாணசபை இயங்காமையால் அபிவிருத்தியைப் பொறுத்தவரை பெரும் பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளது. கடந்த இரண்டரை வருட காலமாக மாகாணசபை உறுப்பினர்களின் ஒதுக்கீடுகள் இல்லை. அதனைவிட கொரோனா சூழலும் உள்ளூராட்சி சபைகளின் வருமானங்கள் இழக்கப்பட்டுள்ளன என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (நி-5-30)




**கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் சி.உதயகுமாரின் வழிகாட்டலின் கீழ் தரம் 8 மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கிய பிரபாகம் சஞ்சிகை வெளியீடு அண்மையில் இடம்பெற்றது.**

**(படம்:-கிருஷ்ணகுமார்)**







**இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா பனிப்பிற்கமைய, நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாண நெடுந்தூர பேருந்து நிலைய திறப்பு விழா யாழ்.மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது. கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், மாநகர சபை ஆணையாளர், மாநகர சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். 122 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் குறித்த பேருந்து நிலையத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.**

**(படங்கள்:-ஐ.சிவசாந்தன், த.சுமித்தி)**

## இராசிபலன்

28.01.2021
தை 15, வியாழக்கிழமை
பூரணை பின்னிரவு 1.33 மணிவரை
பூசம் பின்னிரவு 4.46 மணிவரை
சுபநேரம் 8.06-9.36 மணிவரை
இராகுகாலம் 2.06-3.36 மணிவரை
சந்திராஷ்டமம்: பூராடம்

வளவன்


மேஷம்

பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர் உதவியுண்டு.


மிதுனம்

இனிய செய்திகள் வந்து சேரலாம், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.


கடகம்

வழிபாட்டால் ஆனந்தம் காண வேண் டிய நாள், தேக நலன் சீராகும், பயணத் தால் பலன் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்களில் கூடுதல் கவனம் தேவை.


சிம்மம்

தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் நிலை ஏற்படலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.


கன்னி

விரதங்களில் நம்பிக்கை கூடும், வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.


துலாம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செய் தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.


விருச்சிகம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.


தனுசு

கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வேலைச் சுமை கூடும் நாள்.


மகரம்

நட்பு வட்டம் விரிவடையும் நாள், எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


கும்பம்

கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், போசன சுகமுண்டு.


மீனம்

தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

திடமான உடல் தான் திடமான மனம்

# இலங்கைக்கு எதிராக புதியதொரு தீர்மானம் அவசியம்

## சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் வலியுறுத்து

**(கொழும்பு)**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரின் போது இலங்கையின் மனித உரிமை நிலவரங்களைத் தொடர்ந்து கண்காணித்தல், மனித உரிமை மீறல்கள் குறித்த ஆதாரங்களைத் திரட்டுதல், ஆராய்தல் ஆகியவற்றுக்கு ஏதுவான புதிய தொரு தீர்மானத்தை கொண்டு வரவேண்டும் என ஜேர்மனி உள்ளிட்ட உறுப்பு நாடுகளிடம் சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மிக முக்கிய அமர்வு விரைவில் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. இதன்போது ஒருமித்த தீர்வொன்றை அடைய முடியும் என நம்புகின்றோம் என ஜேர்மனியத்தூதுவர் ஹோல்கர் சீபர்ட் அவரது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருந்தார்.

அந்தப் பதிவை மேற்கோள் காட்டி மீள் பதிவொன்றைச் செய்திருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, அதில் மேலும் கூறியிருப்பதாவது,

சர்வதேச சட்டங்களுக்கு முரணாக இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களை சட்டத்தின்முன் நிறுத்துவதற்கு ஏற்றவாறான தேசிய ரீதியில் நம்பகத்தன்மை வாய்ந்த பொறுப்புக்கூறல் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதற்குத் தயாராக இருப்பதாக இலங்கை அரசாங்கம் கூறவில்லை. ஒருமித்த தீர்மானத்திற்கு வரமுடியும் என்பதைப் பாதிக்கப்பட்டவர்கள் பலமுறை கேட்டுவிட்டார்கள்.

எதிர்காலத்தில் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதையும் தண்டனைகளிலிருந்து தப்பிப்பதைத் தடுப்பதையும் நோக்காகக்கொண்ட சர்வதேச பொறிமுறை ஒன்றுக்கு ஆதரவு வழங்குவதாகவும் இலங்கை அரசாங்கம் அறிவிக்கவில்லை. இத்தகைய சூழ்நிலையில் "ஒருமித்த தீர்மானம்" ஒன்றினால் எவ்வித நன்மைகளும் ஏற்படப்போவதில்லை.

ஆகவே இலங்கையின் மனித உரிமை நிலவரங்களைத் தொடர்ந்து கண்காணித்தல், மனித உரிமை மீறல்கள் குறித்த ஆதாரங்களைத் திரட்டுதல், ஆராய்தல் மற்றும் அவற்றைப் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கு ஏதுவான புதியதொரு தீர்மானத்தை கொண்டு வரவேண்டும் என ஜேர்மனி உள்ளிட்ட உறுப்பு நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆகியவற்றை வலியுறுத்துகின்றோம் என்று மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. (ஐ-4)

# மணல் விலையை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் அரசாங்கம் தலையிடும்

(கொழும்பு)

அதிகரித்துச் செல்லும் மணல் விலையைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் அரசாங்கம் நிச்சயமாக தலையீடு செய்யும் என சுற்றாடல்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சுற்றாடல்துறை அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மணல் விநியோகம் செய்யும் சங்கங்கள் சிலவற்றின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



அத்துடன் ஜனாதிபதி செயலணியின் பரிந்துரைக்கு அமைய மணல் விநியோகப் பணிகள் முழுமையாக அரசாங்க தலையீட்டின் கீழ் இடம்பெற வேண்டும்.

மணல் வர்த்தகர்களால் அதிக விலைக்கு மணல் விநியோகித்தல், முற்பதிவு செய்கின்ற போது அளவுக்கு ஏற்ற வகையில் மணல் பொது மக்களுக்கு வழங்காமை மற்றும் மணம்பிட்டிய மணல் எனக்கூறி ஏனைய மணல்களை மக்களுக்கு விற்பனை செய்தல் உள்ளிட்ட மோசடிகள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (ஐ-4)

# அரசாங்கத்தின் தீர்மானத்துடன் அமைச்சர்கள் இணைந்து செயற்பட வேண்டும்

(கொழும்பு)

ஜனாதிபதியும். அரசாங்கமும் ஒரு தீர்மானத்தை எடுத்தால் அதனுடன் அமைச்சர்கள் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இணையாது வேறு நோக்கங்களின் பின்னால் செல்ல முயற்சிப்பது பாரிய அழிவை ஏற்படுத்தக்கூடும் என அவர் எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போது அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது எதிர்க்கட்சிகளின் சவால்களை வெற்றி பெற்று ஜனாதிபதியை பதவிக்கு கொண்டு வந்தது இந்த நாடு.


பின் பிரதமரை நியமித்து அரசாங்கத்தை அமைத்து சரியான முடிவுகளை எடுக்கும் போது அந்தத் தீர்மானங்களுடன் இணைந்திருக்க வேண்டும்.

சில நேரங்களில் பௌத்த



பிக்குகள் சிலரைத் தூண்டி விடுகின்றனர். ஆகையால் இந்த விடயத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# இனந்தெரியாத நபர்களால் வீட்டிற்கு தீ வைப்பு



(நெளுக்குளம்)

வவுனியா இராசேந்திரங்குளம் பகுதியில் இனம் தெரியாத நபர்களால் வீடு ஒன்று எரிக்கப்பட்டுள்ளதாக வீட்டின் உரிமையாளர் வவுனியாபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குறித்த நபர் நேற்றைய தினம் தனது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த போது அவரது வீடு தீப்பற்றி எரிவதை உணர்ந்து கூக்குரலிட்டு அயலவர்களிற்கு தெரியப்படுத்தினார். விரைந்துவந்த அயலவர்கள் வீட்டின் தீயை அணைத்தனர்.

சில விசமிகளால் தனது வீடு எரிக்கப்பட்டுள்ளதாக குறித்த வீட்டின் உரிமையாளர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். குறித்த வீட்டின் உரிமையாளர் இரு கண்களினதும் பார்வையிழந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸாருடன் இணைந்து வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(நி-5-4-299)

# மன்னாரில் மேலும் ஒரு தொகுதி பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுப்பு

(மன்னார்)


மன்னாரில் மேலும் ஒரு தொகுதி பி.சி.ஆர்.பரிசோதனைகள்நேற்று முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் இணைந்து பி.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

மன்னார் புதிய பேருந்து தரிப்பிடத்தில் வைத்து மன்னார் மாவட்ட தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் மன்னார் பேருந்து தரிப்பிடப் பகுதியில் சேவையில் ஈடுபடும் ஆட்டோ சாரதிகள் மற்றும் பொலிஸார் ஆகியோருக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளாத மன்னார் பேருந்துத் தரிப்பிடப் பகுதியில் சேவையில் ஈடுபடும் ஆட்டோ சாரதிகளை நாளை வியாழக்கிழமை முதல் சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்படமாட்டாது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது.(5-4-285)



**நெடுந்தீவு கடற்பரப்பில் கடற்படையின் படகுடன் மோதுண்டு மீன்பிடிப் படகு விபத்துக்குள்ளாகியதில் கடலில் மூழ்கி உயிரிழந்த இந்திய மீனவர்கள் நால்வருக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ்ப்பபாணப் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக வளாகத்தில் இவ் அஞ்சலி நிகழ்வு நேற்று முற்பகல் 10.15 மணியளவில் இடம்பெற்றது. (படங்கள்:-சிவசாந்தன்)**



**கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் நூலகக் கட்டடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் க.மதுரநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் நூலகக் கட்டடத்தினைத் திறந்து வைத்தார். கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜனும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார். (படம்:-கிருஷ்ணகுமார்)**

# மக்கள் சந்திப்பு தினங்களில் கூட்டங்கள் நடைபெறுவதால் மக்களுக்கான சேவை தாமதம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்கள் சிலவற்றில் மக்கள் சந்திப்பு நாளான திங்கட்கிழமைகளில் பிரதேச செயலகங்களில் கூட்டங்கள் நடைபெறுவதால் பொதுமக்கள் தமது சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட நேரமாக காத்திருக்க வேண்டி உள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் பொது மக்கள் சந்திப்பு நாளாக புதன் கிழமை இருந்தது. ஆனால் புதிய அரசாங்கம் பொதுமக்கள் சந்திப்பினை வாரத்தில் ஆரம்ப நாளான திங்கட்கிழமை என அறிவித்த நிலையில் திங்கட்கிழமைகளில் பிரதேச செயலகங்களுக்கு தமது தேவைகளைப் பெற்றுக் கொள்ள வரும் பொதுமக்கள் பிரதேச செயலகத்தில் இடம்பெறும் கூட்டங்களினால் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி உள்ளதாகவும் பொதுமக்களுக்கான சேவைகள் விரைவாக பெற்றுக் கொள்ள முடியாது இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

பிரதேச செயலகங்களுக்கு திங்கட்கிழமைகளில் தேவைகளை பெற்றுக் கொள்ளச் செல்லும் பொதுமக்களின் தேவைகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (5-4-350)

# குத்துப்பாலத்தினை மேம்பாலமாக மாற்ற மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு சிவபுரம் பகுதியில் அமைந்துள்ள குத்துப்பாலத்தினை மேம்பாலமாக மாற்றுமாறு மாந்தை கிழக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மாந்தை கிழக்கிற்கான முதன்மை வீதியில் குறித்த பாலம் உள்ளது.

வவுனிக்குளம் வான் பாய்கின்ற போது மாந்தை கிழக்கிற்கான போக்குவரத்து பாதிக்கப்படுகிறது.

இதன் காரணமாக நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் காவு வண்டி உட்பட எந்த வாகனங்களும் வெளியிடங்களுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்படுகிறது. கடந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் குத்துப்பாலத்தினை மேம்பாலமாக மாற்றுமாறு மாந்தை கிழக்கு மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் குத்துப்பாலத்தினை மேம்பாலமாக மாற்றுவதன் மூலம் மாந்தை கிழக்கிற்கான போக்குவரத்துகள் வவுனிக்குளம் வான் பாய்கின்ற போதும் சிரமமின்றி மேற்கொள்ள முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5-4-350)

# காணித் துண்டு வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு ஆரம்பம்

(குருமன்காடு)

இளம் தொழில் முனைவோருக்கு இலவச காணித் துண்டுகள் வழங்கும் திட்டத்தில் ஒரு தொகுதியினருக்கான நேர்முகத் தேர்வுகள் வவுனியா பிரதேச செயலகத்தில் இன்று நடைபெறும்.

காணி முகாமைத்துவ அலுவல்கள், அரச தொழில் முயற்சிக் காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரச காணிகளில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இத் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் இளம் தொழில் முனைவோர்களுக்கு இலவச காணித் துண்டுகள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் நாடு பூராகவும் கோரப்பட்ட நிலையில் வவுனியா பிரதேச செயலகத்தில் விவசாயம் மற்றும் பண்ணை அமைக்கும் தொழில் முயற்சிக்காக அதிகளவிலான இளைஞர், யுவதிகள் காணி கோரி விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களில் ஒரு தொகுதியினருக்கான நேர்முகத் தேர்வுகள் இன்று, நாளை, நாளை மறுதினம் மற்றும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதிகளில் வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெறும்.

விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத் தேர்வுக்கான கடிதங்கள் கிராம உத்தியோகத்தர் ஊடாக வழங்கப்பட்டு வருகிறது. (நி-5-4-250)


உ

திருச்சிற்றம்பலம்
நன்னெறியுலவும் நீதிநாயக முதலியாரின்
பன்னியின் கற்பந் தன்னில் பாம்புருவாகத் தோன்றிய
பின்னமிலம்பர் போற்றப் புளியம் பொக்கணையில் வைகித்
தன்னருள் புரியும் நாகதம்பிரான் தாளிற் தாழ்வோம்
திருச்சிற்றம்பலம்

**“நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக”**

# வரலாற்றுச் சிறப்புமிக்க

# கிளி/கரைச்சி–புளியம் பொக்கணை
# திருவருள் மிகு நாகதம்பிரான் ஆலய



## நூதன, சப்ததள, பஞ்சதள, அதி சுந்தர இராஜகோபுர
## பஞ்சகுண்டபக்ஷ மகாயாக
## மகா கும்பாபிஷேக பெரும் சாந்தி பெருவிழா - 2021

நாகதம்பிரான் மெய்யடியார்களே!
28.01.2021 வியாழக்கிழமை தைத்திங்கள் 15 ம் பௌர்ணமி திதியும், பூச நட்சத்திரமும், அமிர்த சித்தயோகமும் மீன லக்கினமும் கூடிய காலை 9.21 தொடக்கம் 11.00 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் ஸ்ரீ நாகேஸ்வரி அம்பிகா சமேதர நாகலிங்கேஸ்வரப் பெருமானின் சப்த தள இராஜகோபுர கும்பாபிஷேகமும், நாகதம்பிரான் பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகமும் இடம் பெற்று ஆசிர்வாதமும் விபூதி பிரசாதமும் வழங்கப்படும்.

**கும்பாபிஷேக பெருவிழாவில் அடியவர்கள் ஆசார சீலர்களாக கலந்து தங்களால் இயன்ற சிவ திரவியங்களைக் கொடுத்து கோபுர கும்பாபிஷேகத்தை பார்த்து அகம் மகிழ்ந்து கோடி புண்ணியம் பெறுவீர்களாக**

குறிப்பு : சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட அடியார்களுடன் நடைபெறும்

தர்மகர்த்தாக்களும்,
ஆலய பரிபாலன சபையினரும்.

(சி-1287)

“கோபுர தரிசனம் கோடி புண்ணியம்”


## கிழக்கு முனைய விவகாரம்

# தேசிய வளங்களை பிறநாட்டவர்களுக்கு தாரைவார்ப்பது தேசத்துரோக செயற்பாடு

## போராடுவோம் என்கிறார் தேரர்

**(கொழும்பு)**

**கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை பாதுகாக்க வீதிக்கிறங்கி போராடவும் தயார் என்றும் தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு வழங்க மாட்டோம் என்ற கொள்கையை அரசாங்கம் முறையாக செயற்படுத்த வேண்டும் என்றும் அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.**



அபயராம விகாரையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கம் மக்களாணைக்கு முரணாக செயற்பட்டதால் ஜனநாயக ரீதியில் புறக்கணிக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சி மீது நாட்டு மக்கள் பெரும்எதிர்பார்ப்பை கொண்டுள்ளார்கள்.

மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய அரசாங்கம் செயற்பட வேண்டும்.

தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு தாரை வார்ப்பது தேசத்துரோக செயற்பாடு என சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


ஆகவே அரசாங்கம் கொள்கைக்கு அமைய செயற்பட வேண்டும்.கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் விவகாரத்தை கொண்டு ஒரு தரப்பினர் அரசாங்கத்தை பலவீனப் படுத்த முயற்சிக்கிறார்கள்.

கடந்த அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்கிய போது வீதிக்கிறங்கி போராடினோம்.

அப்போது இருந்த வலிமை தற்போதும் உள்ளது.

ஆகவே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை பாதுகாக்க வீதிக்கிறங்கி போராடவும் தயாராகவுள்ளோம் எனத் தெரிவித்தார். (ஜ-4)

## முற்றாக எரிந்த வீடு



(கண்டி)

உடபுஸ்ஸலாவ - டெல்மார் கீழ் பிரிவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் ஒரு வீடு தீயினால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த வீட்டில் இருந்த 5 பேர் தற்காலிகமாக தோட்ட கழக மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான காரணம் இது வரை உறுதி செய்யாத போதிலும் மின் கசிவின் காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என பிரதேசவாசிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் மற்றும் பாடப் புத்தகங்கள் என்பவை தீக்கிரையாகியுள்ளன. (ஜ-4)




**ஜோண்**

**அப்பா இந்த அம்மாவ என்னால சமாளிக்க முடியல...!**



**வீட்டுக்கு வரும் போது வேற நல்ல அம்மா வாங்கிட்டு வா...**

**ஐறின்**

**கணவன்: என் அம்மாவுக்கு ஏன் நீ சாப்பாடு கொடுக்கல..!**



**மனைவி: அவங்க தான் சொன்னாங்க நான் இனி வாய திறக்க போறதில்லை என்று**

**ஷெர்லின்**

**சேலையை கட்டி அழகு பார்க்கிற பெண்களை விட...**



**சேலையை அலுமாரியில் வைத்து அழகு பார்க்கும் பெண்கள் தான் அதிகம்**

**டியுறா**

**டேய் அண்ணா இன்னைக்கு என்னோட ஸ்பெஷல் டா...**



**ஆத்தாடி!!! எனக்கு உடம்பு சரியில்ல நீ மட்டும் சாப்பிடுமா..!**

**அன்றுக்ஷன்**

**விட்டுக் கொடுத்தே பழகாதீர்கள் பிறகு ஒருமுறை மறுத்தாலும் நீங்கள் கெட்டவராகவே அடையாளப்படுத்தப்படுவீர்**



**நிஷாந்தினி**

**மாதத்துக்கு ஒரு வாட்டிதான் சம்பளம் வருது...!**



**ஆனால் ஆசைகள் மட்டும் 30 நாளைக்கு 300 விதமா வருது...**

**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# சுங்க அதிகாரிகள் தொடர்பான ஜனாதிபதியின் யோசனைக்கு தொழிற் சங்கங்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

**ஊழல் நிறைந்த அதிகாரிகளை அகற்றுவதற்கான தீர்வாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்ட மூன்றாம் தரப்பு அல்லது இராணுவத்தை கடமைகளில் ஈடுபடுத்துவதற்கான யோசனையை சுங்கத் தொழிற் சங்கங்கள் எதிர்த்துள்ளன.**

சர்வதேச சுங்க தினமான நேற்று முன்தினம் சுங்கத் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போது இந்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சமீபத்திய கருத்துக்கள் குறித்து தமது முழு அதிருப்தியையும், கடுமையான கவலையையும் தாம் வெளிக்காட்டுவதாக தொழிற்சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

சுங்க அதிகாரிகள் பொதுவாக ஊழல் மிக்கவர்கள் என்று ஜனாதிபதி கூறுவது நியாயமில்லை என்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.(ஜ-4)

# அரச வைத்தியசாலைகள் ஊடாகவே கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்படும்

## விசேட வைத்திய நிபுணர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொவிட் தடுப்பிற்கான தடுப்பூசி தற்போது அரச வைத்தியசாலைகளின் ஊடாகவே வழங்கப்படும். நாட்டில் சுமார் 1,060 அரச வைத்தியசாலைகள் காணப்படுகின்றபோதிலும் அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்டவற்றினூடாக தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும் என கொரோனா நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தடுப்பூசிகளை உரிய இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கும் மக்களுக்கு வழங்குவதற்கும் சகல தயார்படுத்தல்களும் செய்யப்பட்டுள்ளன. தடுப்பூசிகள் வழங்கப்பட்டாலும் அடிப்படை சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை பேணுவதும் அத்தியாவசியமானதாகும்.

நாம் வைத்தியசாலைகள், தனிமைப் படுத்தல் நிலையங்கள் உள்ளிட்டவற்றுக்குச் செல்லும் போது தொற்று ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

ஆனால் அதற்காக எமது தொழிலிலிருந்து எம்மால் மீள முடியாது. இது மிகவும் ஆபத்தான தொற்றாகும். எனவே மக்களனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (ஜ-4)

# சீனப் பாதுகாப்பு அதிகாரிகள் இராணுவத் தளபதியுடன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான சீனப் பாதுகாப்பு இணைப்பு சிரேஷ்ட அதிகாரி கேணல் வாங் டொங் மற்றும் பிரதிப் பாதுகாப்பு இணைப்பு அதிகாரி கேணல் சாங்கியன்ஜின் ஆகியோர்; பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவை கடந்த திங்கட்கிழமை இராணுவத் தலைமையகத்தில் சந்தித்தனர்.

குறித்த சந்திப்பில் சீன இராணுவத்தால் ஏற்கனவே இலங்கைக்கு வழங்கப்பட்ட ஒத்துழைப்பிற்கு மேலதிகமாக, இரு நிறுவனங்களுக்கிடையிலான நல்லுறவு மற்றும் இலங்கையிலுள்ள முப்படையினருக்கு பொருத்தமான பயிற்சியினை மேலும் முன்னேற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டன.

சீன இராணுவம் கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை இராணுவத்திற்கு வழங்கி வரும் ஒத்துழைப்பை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட ஜெனரல் சவேந்திர சில்வா எதிர்காலத்தில் இதுபோன்ற உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கான தனது விருப்பத்தினையும் அவர்களிடம் வெளிப்படுத்தினார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பயனுள்ள வாழ்க்கை

ஓர் இளைஞன் வசதியான குடும்பத்தில் பிறந்தான். அவனுக்கு வாழ்க்கையில் நிம்மதி இல்லை. வாழவே பிடிக்கவில்லை. எல்லாமே வெறுத்துப் போய்விட்டது. என்ன செய்யலாம் என்று யோசித்தான். ஒரு குருவைத் தேடிப் போனான். (ஜென் குரு) அவரிடம் தான் வந்த விபரத்தைச் சொல்லி, ஏதாவது வழி சொல்லுங்க சுவாமி என்று கேட்டான்.

அவர் பார்த்தார் சரி..அதற்கு முன்னர் உன்னைப் பற்றி கொஞ்சம் சொல்... எவ்வளவு படித்திருக்கின்றாய்... என்ன தெரியும் உனக்கு? என்று கேட்டார். சுவாமி... நான் ஒழுங்காகப் படிக்கவில்லை. எதுவும் தெரியாது. ஆனால் ஒன்று கொஞ்சம் சதுரங்கம் ஆடத் தெரியும் எனக்கு அவ்வளவுதான் என்றான். குரு யோசனை செய்தார். பக்கத்திலே இருந்த ஒரு சீடனைக் கூப்பிட்டார். அவனிடம் ஒரு பெயரைச் சொல்லி நீ உடன் போய் அந்த பிக்குவைக் கூட்டிக் கொண்டு இங்கே வா...

வரும்போது ஒரு சதுரங்கப் பலகையும் அதிலே விளையாடுவதற்கான காய்களையும் எடுத்துக் கொண்டு வா. அப்படியே எங்கள் சீடர்கள் எல்லோரையும் இங்கே வரச் சொல்லு என்றார். கொஞ்ச நேரத்தில் எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். சதுரங்கப் பலகையைக் கொண்டு வந்து வைத்தார்கள். அந்தப் பிக்குவும் வந்து சேர்ந்தார். குரு முன்பு அடக்கமாக வந்து நின்றார். அவரை அருகிலே கூப்பிட்டு கொஞ்சநேரம் சதுரங்கம் ஆட வேண்டும் என்றார்.

அந்தப் பிக்குவுக்கு சதுரங்கம் என்றால் என்ன என்றே தெரியாது. இருந்தாலும் மறுப்பு எதுவும் சொல்லவில்லை. குரு சொன்னார்...பிக்குவே நீர் என்னுடை சீடர். என் பேச்சை மறுக்காதவர். உம்முடைய அடக்கத்தையும் பணிவையும் நான் அறிவேன். எனக்காக உயிரையும் கொடுப்பதாகச் சொல்லி இருக்கின்றீர்கள். இப்பொழுது அதற்கான வாய்ப்பு வந்திருக்கிறது.

நீர் இந்த இளைஞனோடு சதுரங்கம் ஆட வேண்டும். தோற்றுப் போனால் இந்த வாளால் தலையைச் சீவிடுவேன். ஆனால் இறந்தால் உமக்குச் சொர்க்கம் நிச்சயம்... நீங்கள் வெற்றி வெற்றுவிட்டால் தோற்றுப் போன இந்த இளைஞனின் தலையைச் சீவிடுவேன். சரி.. இப்பொழுது நீங்கள் ஆட ஆரம்பிக்கலாம் என்றார்.

ஆட்டம் ஆரம்பமாகி விட்டது. அந்தப் பிக்கு முகத்திலே சலனமே இல்லை. சாவைப் பற்றி கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. எதுவும் புரியவில்லை. என்றாலும் குருவின் கட்டளை என்பதால் ஏதோ ஒரு காயை நகர்த்திக் கொண்டிருந்தார். சுற்றியிருந்த சீடர்கள் முகத்தில் திகில், பயம், பாவம், எங்கள் பிக்கு நிலைமை இப்படி ஆகிவிட்டதே என்கின்ற கவலை. குரு கையிலே பெரிய வாள் பளபளப்பாக தயாராக இருந்தது.

பிக்கு காயை நகர்த்துவது ஆரம்பத்தில் ஆச்சரியமாக தெரிந்தாலும் அவருக்குச் சதுரங்கம் பற்றி எதுவுமே தெரியாது என்பது இளைஞனுக்குப் புரிந்து போய் விட்டது.

அவனுக்கு உற்சாகம் வந்து விட்டது. சுறுசுறுப்பாக காய்களை நகர்த்த ஆரம்பித்தான். பிக்கு. கொஞ்சம் கொஞ்சமாக தோற்றுக் கொண்டே வந்தார். சுற்றியிருந்த சீடர்கள் முகத்தில் சொல்ல முடியாத வேதனை.

இளைஞன் முகத்தில் மகிழ்ச்சி. நிமிர்ந்து பார்த்தான் எதிரிலே இருந்த பிக்குவை. அவர் முகத்தைப் பார்த்ததும் இவனுக்கு மிகவும் பாவமாக இருந்தது. அந்த முகத்திலே தான் எவ்வளவு சாந்தம். எவ்வளவு கருணை. இவர் சாகத்தான் வேண்டுமா? இளைஞன் யோசிக்க ஆரம்பித்தான்.

நாம் இறந்து போனால் யாருக்கும் எந்த இழப்பும் இல்லை. வீணாகிப் போன தன் வாழ்வும் சாவும் யாரையும் பாதிக்காது. ஆனால் துறவியும் ஞானியுமான கருணை மிக்க இந்தப் பிக்கு இறந்தால் அது எவ்வளவு பெரிய இழப்பு? அதற்கு நாம் காரணமாக இருப்பதா? இப்படி நினைத்துப் பார்த்தான் அந்த இளைஞன்.

உடனே கன்னா பின்னா என்று விளையாட ஆரம்பித்து விட்டான். தான் தோற்றுப் போக வேண்டும் என்பதற்காக ஆட்டத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த குரு திடீர் என்று சதுரங்கப் பலகையைக் கவிழ்த்துத் தள்ளினார். காய்கள் எல்லாம் கவிழ்த்துத் தள்ளினார். காய்கள் எல்லாம் சிதறிப் போய்விட்டன. எல்லோரும் திகைத்துப் போய்விட்டார்கள்.

யாருக்கும் வெற்றி, தோல்வி இல்லை என்று அறிவிக்கின்றேன் என்றார் குரு. தம்பி உன்னுடைய மன ஒருமைப் பாட்டைக் கவனித்தேன். முழுமையான ஆட்டத்திலே மூழ்கிப் போனதையும் பார்த்தேன். கடைசியில் உயிர்த்தியாகம் செய்ய முடிவெடுத்து தாறுமாறாக ஆட ஆரம்பித்ததையும் கவனித்தேன்.

வாழ்க்கை என்ன என்பதும் எந்த வாழ்க்கை பயனுள்ள வாழ்க்கை என்பதும் உனக்குப் புரிந்துவிட்டது. இப்பொழுது இங்கே அதை நீ கற்றுக் கொண்டாய். உன்னுடைய மனம் பக்குவ நிலையை அடைந்து விட்டது. தியாகம் உன் இதயத்தில் குடிகொண்டது.

அது எங்கே இருந்தும் வரவில்லை. உனக்குள் இருந்ததுதான் அது. அதை நீ அடையாளம் கண்டு கொண்டாய். நீ இனிமேல் கொஞ்சக் காலம் இங்கே இருந்துவிட்டுப் போகலாம். உன்னுடைய வாழ்வு பயனுள்ள வாழ்வாகும் என்றார் அந்தக் குரு.

இந்தக் காலத்திலேயும் ஒருத்தர் அது மாதிரி தன்னுடைய வாழ்க்கையை பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டார். உடனே சதுரங்கம் ஆட ஆரம்பித்தார். பின்பு சீட்டாட ஆரம்பித்தார்.கொஞ்ச நாள் கழித்து அவரைப் பார்த்த நண்பர் ஒருத்தர் கேட்டார்... என்னங்க சீட்டாட ஆரம்பித்த பிறகு வாழ்க்கை பயனுள்ளதாக ஆகிவிட்டதா? என்று கேட்டார். ஆச்சு என்றார் அவர். யாருக்கு உங்களுக்கா? என்றார். இல்லை நான் யாரோடு ஆடினேனோ அவருக்கு என்றார்.

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு முறையும் தேர்தல் நடைமுறைகளும் (2017 வரை)

10

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் (1) மண்முனை பி.தே.ச,(2) ஏறாவூர் பி.தே.ச,(3) மண்முனை தென், எருவில்பற்று பி.தே.ச, (4) ஏறாவூர் பற்று பி.தே.ச (5) கோறளைப்பற்று பி.தே.ச,(6) மண்முனை மேற்கு பி.தே.ச (7) கோறளைப்பற்று வடக்கு பி.தே.ச, (8)கோறளை மேற்கு பி.தே.ச, (9) மண்முனை தென் மேற்கு பி.தே.ச, (10) போரதீவுப் பற்று பி.தே.ச,(11) காத்தான்குடி பி.தே.ச ஆகிய 11 பிரதேச சபைகள் புதிதாக உருவாக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் (1) திருக்கோவில் (2) லாஹுகல (3)தெஹியத்தகண்டிய, (4) மகா ஓயா (5)பதியதலாவை,(6) உஹன (7) கல்முனை (8)சம்மாந்துறை (9)பொத்துவில் (10) நிந்தவூர் (11)அட்டாளைச்சேனை (12) கரன் கொடித்தீவு (13) நாமல்ஓயா (14) தமன (15)ஆலையடி வேம்பு ஆகிய 15 பிரதேச சபைகள் புதிதாக உருவாக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் (1) திருகோணமலை பட்டினமும் சூழலும் (2)சேருவில (3)பதவி ஸ்ரீபுர (4)குச்சவெளி (5) கோமரங் கடவல (6)மொரவெவ (7)கந்தளாய் (8)தம்பலகாமம் (9)கிண்ணியா (10)மூதூர் ஆகிய (10) பிரதேச சபைகள் புதிதாக உருவாக்கப்பட்டன.

### உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் மக்கள் விகிதம்

1981 வரை மாநகர சபைகள், நகர சபைகள், பட்டின சபைகள் கிராமச் சபைகள் இருந்தன. இச் சபைகளில் எல்லாமாக 8,800 உறுப்பினர்கள் இருந்தார்கள். 1981ஆம் ஆண்டின் சனத்தொகை 14,846,750 பேர். எனவே உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் மக்கள் விகிதம் 1:1687 ஆகும். அதாவது சனத்தொகையின் 1687 பேருக்கு ஒரு உறுப்பினர் என்ற வீதத்தில் இருந்தார்கள். 1981இல் பட்டின சபைகள் கிராமச் சபைகளுக்கு பதிலாக மாவட்ட அபிவிருத்தி சபைகள் உருவாக்கப்பட்டன. இம் மாற்றத்தின் பின் மொத்த உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் 869 (மாநகர சபை உறுப்பினர்கள் - 233, நகர சபை உறுப்பினர்கள் - 312, மாவட்ட அபிவிருத்தி சபையில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை - 156, பதவி வழி உறுப்பினர்களின் எண்ணிக்கை/பாராளுமன்ற அங்கத்தவர்கள் - 168). 1981 ஆம் ஆண்டின் சனத்தொகை 14,846,750 பேர். எனவே உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் மக்கள் விகிதம் 1:17086 ஆகும். அதாவது மாவட்ட அபிவிருத்திச்பை முறை உருவாக்கப்பட்டதால் சனத்தொகையின் 17086 பேருக்கு ஒரு உறுப்பினர் என்ற வீதத்தில் மாற்றம் அடைந்தது. இம் முறை, மக்களுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையே பெரிய இடைவெளியைத் தோற்றுவித்தது. இதை நிவர்த்தி செய்யும் முகமாக அப்போதிருந்த 4712 கிராம சேவகர் பிரிவுகளிலும் தலா ஒரு "கிராமோதய சபை"(Gramodaya Mandala) தாபிக்கப்பட்டது. ஆனால் அதுவும் பலன் தரவில்லை.

1987இல் பிரதேச சபைச் சட்டம் உருவாக்கப்பட்டது. இதன்படி உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்படவேண்டிய மொத்த உறுப்பினர்கள் 4354 பேர். 1987இல் சனத்தொகை அண்ணளவாக 17,000,000 பேர்.

எனவே உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் மக்கள் விகிதம் 1:3094ஆகும். அதாவது பிரதேச சபைச் சட்டம் உருவாக்கப்பட்டதால் சனத்தொகையின் 3094 பேருக்கு ஒரு உறுப்பினர் என்ற வீதத்தில் மாற்றம் அடைந்தது.

**உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் மக்கள் விகிதம்**

| காலப்பகுதி | உறுப்பினர் : மக்கள் |
|---|---|
| 1981க்கு முன் | 1: 1687 |
| 1981-1987 | 1:17086 |
| 1987க்கு பின் | 1:3094 |
| சனத்தொகை வளர்ச்சி வீதத்திற்கு ஏற்ப இவ் விகிதம் மாறுபடும் | |

### உள்ளூராட்சி சபைகளின் விகிதாசார பிரதிநிதித்துவ விருப்பு வாக்கு தேர்தல் நடபடிகள் வேட்புமனுத் தாக்கல்

தேர்தலுக்கு முன்னர், வேட்புமனுத் தாக்கல் செய்யவேண்டிய திகதியைத் தீர்மானித்தல், தேர்தல் தினத்துக்கான திகதியைத் தீர்மானித்தல், தேர்தல் ஒழுங்குகள் மற்றும் தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்தல் முதலியன தேர்தல்கள் ஆணையாளரினால் மேற் கொள்ளப்படுகின்றன. தேர்தலில் அரசியல் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. தனியாள் போட்டியிட முடியாது.

ஒரு உள்ளூராட்சி நிறுவனத்துக்குத் தெரிவு செய்யப்பட வேண்டிய பிரதிநிதிகள் எண்ணிக்கைக்கு மேலதிகமாக, ஆறு பேர்களோ அல்லது தெரிவு செய்ய வேண்டியவர்களுள் 1/3 பங்கு அதிகமானவர்களோ இவற்றில் எது குறைவானதோ அவர்களையும் சேர்த்துப் பட்டியல் தாக்கல் செய்ய வேண்டும். உதாரணமாக தெரிவு செய்யப் படவேண்டிய உறுப்பினர்கள் 24 ஆயின் வேட்புமனு நியமனப் பத்திரத்தில் 30 பேர்கள் போட்டியிட வேண்டும்.

பட்டியலில் சேர்த்துக் கொள்கின்றவர்களுள் 40%ஆனோர் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். இளைஞர்களை ஆட்சி நடவடிக்கையில் பங்குபற்றவைப்பதற்காக இது பின்பற்றப்படுகின்றது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிமூலம் வேட்பு நியமனப்பத்திரம் கொடுப்பதாயின் அக்கட்சியின் செயலாளரும் சுயேட்சைக் குழுவானால் அக்குழுவின் தலைவரும் விண்ணப்பத்தில் உறுதிசெய்து ஒப்பமிட்டிருக்க வேண்டும். அத்துடன் சமாதான நீதவான் ஒருவரோ அல்லது சட்டத்தரணி ஒருவரோ அதில் கையொப்பம் இட்டிருக்க வேண்டும்.

கட்சிகளில் போட்டியிட்டால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. சுயேட்சைக் குழுவாயின் கட்டுப் பணம் செலுத்தவேண்டும். நகர சபை, மாநகரசபைக்கு அல்லது பிரதேச சபை ஒன்றுக்கு போட்டியிடுவதாயின் ஒருவருக்கு 250/=ரூபா வீதம் கட்டுப்பணம் செலுத்த வேண்டும். தேர்தலில் எந்தவொரு உறுப்பினரும் தெரிவாகவில்லையாயின் அல்லது கட்சி பெற்ற வாக்குகள் 1/20 பங்கிலும் குறைவாயின் கட்டுப்பணம் அரசுக்குச் சொந்தமாகிவிடும்.

வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டபின் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு விருப்பு இலக்கங்கள் வழங்குவதாகும். அதாவது சிங்கள அகரவரிசை ஒழுங்கின்படி வேட்பாளர்களின் பெயர்கள் வரிசைப்படுத்தப்பட்டு விருப்பு இலக்கங்கள் வழங்கப்படுகிறது.

### மாதிரி வாக்குச்சீட்டும் வாக்களிக்கும் முறையும்

உள்ளூராட்சித் தேர்தலின்போது வழங்கப்படக் கூடிய மாதிரி வாக்குச் சீட்டு படம் -1 தரப்பட்டுள்ளது. வாக்களிக்கும் போது முதலில் தாம் விரும்பும் கட்சி அல்லது சுயேட்சைக்குழுவின் சின்னத்திற்கு எதிரேயுள்ள கூட்டில் புள்ளடி (X)இட்டு வாக்களிக்க வேண்டும். அதன் பின்புமூன்று விருப்பு வாக்குகளை அளிக்க முடியும்.

மூன்று விருப்பு வாக்குகளையும் ஒருவருக்குப் போடலாம். இல்லாவிட்டால் இருவருக்கோ அல்லது மூவருக்கும் பகிர்ந்து வாக்களிக்கலாம். விருப்பு வாக்குகளைப் போடாது கட்சிக்கு மட்டும் வாக்களித்தால் அவ்வாக்கு கட்சிக்கு மட்டும் செல்லுபடியாகும்.

அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சைக்குழுக்களில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றுக்கு வாக்களித்தாலும் அல்லது மூன்று விருப்பு வாக்குகளுக்கு அதிகமாக வாக்களித்தாலோ முறையே வாக்கும், விருப்பு வாக்குகளும் செல்லுபடியற்றதாகிவிடும்.

மாதிரி வாக்குச் சீட்டு படம்-1

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பசுமைக்கட்சி | | | | | | Π | |
| நீதிக்கட்சி | | | | | | ✚ | |
| நேர்மைக் கட்சி | | | | | | μ | |
| சுயேட்சைக்குழு -1 | | | | | | Ý | |
| சுயேட்சைக்குழு -2 | | | | | | ß | |
| 1 | | | | 7 | | | |
| 2 | | | | 8 | | | |
| 3 | | | | 9 | | | |
| 4 | | | | 10 | | | |
| 5 | | | | 11 | | | |
| 6 | | | | 12 | | | |

### வாக்குகள் கணக்கிடப்படும் முறை

முதலாவதாக, அந்தந்த அரசியல் கட்சிகளுக்கும், சுயேட்சைக் குழுக்களுக்கும் கிடைத்த வாக்குகள் எண்ணிக்கை கணக்கிடப்படும். இதன்பிறகு விருப்பு வாக்குகள் கணக்கிடப்படும். குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றத்துக்கான தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்ற கட்சி அல்லது சுயேட்சைக்குழுவுக்கு முதலில் இரண்டு 'போனஸ்' ஆசனாங்கள் ஒதுக்கப்படும்.

பிறகு தேர்தலில் செல்லுபடியான மொத்த வாக்கான குறித்த வாக்குகளின் எண்ணிக்கையைக் கொண்டு மற்றைய ஆசனாங்கள் கட்சிகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

(தொடரும்)

# கிழக்கு முனையம் நாளை தீர்மானம்

(கொழும்பு)


கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்பனை செய்வதுமில்லை குத்தகைக்கு வழங்கப்போவதும் இல்லையென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்கனவே தெளிவாகத் தெரிவித்துள்ளார் எனத் தெரிவித்த அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமே, அரசாங்கம் இந்த நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

கிழக்கு முனையம் தொடர்பில் பொய்யான பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சாடினார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

"கிழக்கு முனையத்தில் 51 சதவீதம் இலங்கைக்கும் 49 சதவீதம் இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கும் உரியது" எனச் சுட்டிக்காட்டினார். இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நாளை வெள்ளிக்கிழமை ஜனாதிபதி தலைமையில் ஆளும் கட்சி பாராளுமன்றக் குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது. அதன் பின்னர் இது தொடர்பில் உத்தியோகபூர்வ தீர்மானம் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# மஞ்சளுடன் மூவர் கைது




(கொழும்பு)

நுரைச்சோலை - தலுவ கடற்பகுதியில் கடல் மார்க்கமாக இந்தியாவில் இருந்து சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட மஞ்சள் மற்றும் தடை செய்யப்பட்ட களைகொல்லிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினரால் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பின் போது கைது செய்யப்பட்டனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்(ஜ-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## உற்சாகம் தரும் பிரமோற்சவம்

(தொடர்ச்சி)

பிரமோற்சவத்துக்கு இன்னொரு அர்த்தமும் உண்டு. அதாவது திருப்பதி உள்ளிட்ட சில தலங்களில் உற்சவத்தை பிரம்மனே முன்னின்று நடத்துவதாக ஐதீகம் உண்டு.

பிரம்மன் நடத்தும் உற்சவம் என்பதால் அதற்கு பிரமோற்சவம் என்ற பெயர் ஏற்பட்டதாக சொல்வார்கள். இவை தவிர 5 வகை சிருஷ்டித் தொழிலைக் குறிக்கும் உற்சவத்துக்கும் பிரமோற்சவம் என்று பெயராகும். இதை "பஞ்ச கிருத்தியம்" என்றும் சொல்வார்கள்.

உற்சவ காலத்தில் மேற்கொள்ளப்படும் ம்ருதசங்கரஹனம், அங்குரார்ப்பணம், கல்யாணம், த்வஜாரோஹணம், ரட்சாபந்தனம் ஆகிய ஐந்தும் தான் பஞ்ச கிருத்தியங்கள் என்று கூறப்படுகின்றன.

பிரமோற்சவ கொண்டாட்டம் ஆலயத்துக்கு ஆலயம் மாறுபடும். திருப்பதியில் ஒரு காலத்தில் புரட்டாதியில் ஒன்றும் மார்கழியில் ஒன்றும் என 2 தடவை பிரமோற்சவம் நடத்தப்பட்டன.

திருப்பதி ஆலயத்தின் மூன்றாம் பிரகாரத்தில் உள்ள ஒரு கல்வெட்டில் 1551 ஆம் ஆண்டு 11 தடவை பிரமோற்சவம் நடத்தப்பட்டதாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் பழைமை, வருவாய் மற்றும் மரபுகளைப் பொறுத்தே பிரமோற்சவ கொண்டாட்டங்கள் அமையும். பிரமோற்சவங்கள் ஆலயத்துக்கு ஆலயம் வித்தியாசப்பட்டாலும் வார உற்சவம், மாத உற்சவம், பட்ச உற்சவம் என்ற விதமாகவே நடத்தப்படும்.

சிவனுக்கு ஒருநாள் உற்சவமே உகந்ததாகும். கிராமத்தின் நன்மைக்காக 3 நாட்கள் உற்சவத்தை நடத்தினார்கள். பூதங்களிடம் இருந்து தற்காத்துக் கொள்ள 5 நாட்கள் உற்சவம் நடத்தப்பட்டது. அம்பாளுக்கு உகந்தது 7 நாட்கள் உற்சவமாகும். உலக நன்மைக்காக 9 நாட்கள் உற்சவம் நடத்தப்படுகிறது.

ஆனால் தற்போது பெரும்பாலான சைவத் தலங்களிலும் வைணவ ஆலயங்களிலும் 9 அல்லது 10 நாட்களாகப் பிரமோற்சவ விழா நடத்தப்படுகிறது.

இந்த நாட்களில் ஆலயத்தில் இருக்கும் உற்சவ மூர்த்தி காலையும் மாலையும் வீதியுலா வருவார். இதன்மூலம் ஆலயத்துக்குச் செல்ல முடியாத நிலையில் இருப்பவர்கள் உற்சவரை வழிபட்டு பலன் பெறுவார்கள்.

இறைவனே தம் வீட்டு வாசல் வரை வந்து விடுவதால் பிரமோற்சவ நாட்களில் பக்தர்களிடம் மகிழ்ச்சிப் பொங்கி வழியும். உற்சவரை வரவேற்று இறையருள் பெறுவார்கள்.

சைவ ஆலயங்களில் பிரமோற்சவ விழாவின் தொடக்கமாக புற்றுமண் எடுத்து முளையிடும் நிகழ்ச்சி நடைபெறும். இது சிருஷ்டித் தொழிலைக் குறிக்கும். அடுத்தது கொடி ஏற்றும். அதில் ஈசனுக்குரிய ரிஷபக்கொடி ஏற்றப்படும்.

இரண்டாம் நாள் சூரிய, சந்திர பிரபைகளில் உற்சவர் எழுந்தருள்வார். இறைவன் சூரிய, சந்திரர்கள் மூலம் உலகத்துக்குத் தனது கருணை ஒளியைப் பரப்புகிறான் என்பதை இந்த நடைமுறை உணர்த்தும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## துப்பாக்கிச்சூடு ஒருவர் கைது



(கொழும்பு)

பாணந்துறை- பள்ளிய முல்ல பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலானது டுபாயில் இருந்து வழிநடத்தப்பட்ட ஒன்றாக தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஜ-4)

## அருந்திக்கவுக்கு கொரோனா



(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றுக்குள்ளான ஏழாவது பாராளுமன்ற உறுப்பினர் இவர் ஆவார்.

அருந்திக்க பெர்னாண்டோ தனியார் வைத்தியசாலையொன்றில் நேற்று பி.சி.ஆர்.பரிசோதனையினை மேற்கொண்டுள்ளார்.

அதன் முடிவுகள் நேற்று வெளியாகியுள்ள நிலையிலேயே அவர் கொரோனாத் தொற்றுக்குள்ளானமை தெரியவந்துள்ளது.

முன்னதாக அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, பவித்ரா வன்னியாராச்சி, இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, பியால் நிஷாந்த டி சில்வா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், வசந்த யாப்பா பண்டார ஆகியோரும் கொரோனாத் தொற்றுக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 300 | 280 | 400 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 700 | 250 | 600 | 700 |
| தக்காளி | 150 | 120 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 70 | 50 |
| கோவா | 80 | 100 | 80 | 100 |
| கரட் | 160 | 250 | 180 | 240 |
| பூசணி | 140 | 100 | 130 | 240 |
| புடோல் | 180 | 100 | 140 | 200 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 450 | 250 | 450 | 600 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 70-80 | 100 |
| பாகற்காய் | 300 | 350 | 260 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 120 | 160 | 250 |
| கருணைக் கிழங்கு | 120 | 250 | 120 | 160 |
| பயற்றங்காய் . | 300 | 300 | 350 | 400 |
| லீக்ஸ் | 100 | 180 | 100 | 160 |
| பீற்றூட் | 180 | 100 | 180 | 250 |
| கறிமிளகாய் | 350 | 250 | 280 | 400 |
| முருங்கைக்காய் | -- | -- | — | — |
| போஞ்சி | 260 | 250 | 270 | 280 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | — | 400 |
| கீரை – 1 பிடி | 80 | 60 | 80 | 80 |
| தேசிக்காய் | 80 | 120 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 70-80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 350 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | — | -- | 80 |



# சிறுவர் அரங்கம்

## வைரத்தை திருடியது யார்?

வைர வியாபாரி ஒருவர், பீர்பாலைத் தேடி வந்தார். விலை உயர்ந்த வைரக்கல் ஒன்று கடையிலிருந்து காணாமல் போய் விட்டதா கவும் அதைக் கண்டு பிடிப்ப தற்கு தக்க வழி கூறுமாறும் வைர வியாபாரி பீர்பாலைக் கேட்டுக் கொண்டார்.

பீர்பால் வைர வியாபாரி யின் கடைக்குச் சென்று பார்த் தார். கடையில் நாலைந்து பேர் வேலை செய்து கொண்டி ருந்தார்கள். உங்கள் கடையி லிருந்து வைரத்தை எடுத்தி ருப்பார்கள் என்று யார்மீதாவ து சந்தேகம் ஏற்பட்டுள்ளதா? என்றார் பீர்பால்.

வைர வியாபாரியும் கடை யில் வேலை செய்யும் மூன்று நபர்கள் மீது சந்தேகம் ஏற்படு வதாக கூறினார். மூவரையும் அழைத்து வரச் சொன்னார். கடையிலிருந்து மூவரும் வந் தார்கள்.

அவர்களிடம் பத்து அங்கு லம் நீளமுள்ள மூன்று குச்சி களை ஒவ்வொருவரிடமும் கொடுத்து அதை வீட்டிற்கு எடுத்துச் செல்லுமாறும், ஒரு நாள் வைத்திருந்து விட்டு அடுத்த நாள் குச்சியைத் திருப்பிக் கொண்டு வருமாறு கூறினார்.

அந்தக் குச்சிகள் மந்திர சக்தி வாய்ந்ததும் எனவும் திருடர்களிடம் அக்பர் பீர்பால் கதைஇருந்தால் குச்சி ஒரு ரு நாளைக்கு ஒரு அங்குலம் வளர்ந்து விடும் என்றும் குச் சியை திருப்பி தரும் பொழுது அளந்து பார்ப்பதாகவும் கூறி னார். மூன்று பேரும் குழப்பத் துடன் போய் விட்டார்கள்.

வைரத்தை திருடிய வேலைக்காரனுக்கு அன்று முழுவதும் உறக்கம் வராமல் அவதிப்பட்டான். தான் திருடி யது தெரிந்து விடுமோ என்று பயந்தான். தான் திருடியது தெரியாமல் இருக்க என்ன செய்வது? என்று யோசித்தான்.

நாளைக்கு குச்சியை அள ந்து பார்க்கும் போது ஒரு



அங்குலம் வளர்ந்து விடுமே. அதனால் இப்போது ஒரு அங் குலம் வெட்டி விட்டால் என்ன என்று யோசனை உதித்தது. குச்சியில் ஒரு அங்குலத்தை வெட்டி எடுத்தான்.

அடுத்த நாள் மூன்று வேலை க்காரர்களும் தாம் எடுத்துச் சென்ற குச்சிகளை திருப்பிக் கொடுத்தார்கள். பீர்பால் குச் சியை வாங்கிக் கொண்டார். ஒவ்வொரு குச்சியையும் பார்த் தார். வைரத்தை திருடிய வேலைக்காரன் கொடுத்த குச்சியைப் பார்த்தார். நீளம் குறைந்திருந்தது.வைரத்தை திருடிய வேலைக்காரன் காலையில் குச்சியின் அளவை பார்க்க தவறி இருந்த படியால் தமது செயல் காட்டி கொடுத்து விட்டது.

பீர்பால் அந்த வேலைக்கா ரனை முறைத்தார். வைர த்தை திருடியது நீதான் என் பதை ஒத்துக் கொள்கிறாயா? அல்லது சிறைக்கு செல்கி றாயா? என்றார் பீர்பால்.

வைரத்தை திருடிய வேலை க்காரன் தனது குற்றத்தை ஒத்துக் கொண்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## கௌகமேலா நாயகன்

அந்த நபர் டேரியஸ். பாரசிக மன்னர். உயிர் மீதமிருந்தது.

இன்னும் அதிக நேரம் தாங்காது என் பதை விடுகின்ற மூச் சின் வேகம் சொன் னது. குடிக்கக் கொஞ் சம் தண்ணீர் கேட்டார் டேரியஸ். கொடுத்தார் அந்த வீரர்.

மடக்... மடக்... தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாகத் தொண்டை வழியாக இறங்கியது. அவ்வளவு தான்.

அலெக்சாண்டரைப் புகழ்ந்து சில வார்த் தைகளை உதிர்த்துவி ட்டு அந்த வீரரின் மடியிலேயே உயிர் துறந்தார் டேரியஸ்.

டேரியஸ் மூச்சு அட ங்குவதற்கும் அலெக் சாண்டர் அங்கு வருவ



99

தற்கும் சரியாக இருந் தது. ஓடிவந்து விட யத்தைக் கூறினார் அந்த வீரர். நெஞ்சு கனத்தது போல இருந்தது அலெ க்சாண்டருக்கு.

எவ்வளவு பெரிய வீரமன்னர் இப்படி யாருமற்ற அநாதையாக இறந்து போக நேர்ந்து விட்டதே.

சரி போனது போகட் டும். வெற்றியின் காத லன் டேரியஸின் உடலை சகல ராஜ மரியாதைக ளுடன் அடக்கம் செய் யுங்கள்.

உடனடியாகத் தான் அணிந்திருந்த அரச அங்கியைக் கழற்றி டேரி யஸின் உடலில் போர்த் தினார் அலெக்சாண் டர். மாசிடோனியப் பேரரசின் உச்ச பட்ச மரியாதை அது.

ஒரு நாட்டை வெல் கிறார் அலெக்சாண்டர் என்றால் அங்குள்ள அத்தனை சொத்துக்க ளும் அவருக்கே சொந் தம். யுத்தத்தின் அடிப் படை இதுதான்.

மாசிடோனிய வீரர் களையே எல்லாவற்றை யும் எடுத்துக் கொள் ளும் படி உத்தரவிடு வார் மன்னர் அலெக் சாண்டர்.

யார் யார் எவ்வளவு எடுத்துக் கொள்கிறார் களோ அத்தனையும் அவர் களுக்கே சொந்தம். நாடு திரும்பியதும் அரசி டம் ஒப்படைக்க வேண் டும் என்ற நடைமு றையை அலெக்சாண் டர் பின்பற்றவில்லை.

(தொடரும்)

கடந்த காலத்தை ஆராயலாம் ; போற்றலாம். ஆனால் நமது கண்கள் எப்போதும் முன்னோக்கிப் பாய வேண்டும். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாண்டவரின் வெற்றிக்காக கண்ணன் செய்த இராஜதந்திரம்

ஈழத் தமிழர்கள் அறிவார்ந்தவர்கள் என்று பெயர் வாங்குவதற்கு மூல காரணமாக அமைந்தது புராண இதிகாசப் படிப்புகளாகும்.

கந்தபுராணம் முதல் இராமாயணம், மகா பாரதம் போன்ற இதிகாசங்களைத் தெய்வீக நூல்களாகப் போற்றி நம் முன்னோர்கள் கற்றறிந்தனர்.

அதனால் அவர்களின் அறிவுப்புலம் உயர்வுற்றது.எ

வாசிப்பு, கதாப்பிரசங்கம், நாடகம் என்பவற்றினூடாகப் புராண இதிகாசக் கருத்துக்கள் மக்களைச் சென்றடைந்தன.

எது தர்மம் எது அதர்மம். எது பாவம், எது புண்ணியம் என்ற தத்துவங்களைப் புரிந்து கொண்ட எம் தமிழ் மக்கள் அவற்றில் ஏற்படக் கூடிய ஐயப்பாடுகளை வாதப்பிரதிவாதங்களினூடாகத் தெளிவுபடுத்திக் கொண்டனர்.

இவ்வாறாக கந்தபுராணம், இராமாயணம், பாரதம் ஆகிய புராண இதிகாச நூல்களினூடு ஒன்றித்து வாழ்ந்த எம் மக்களின் வாழ்வியலில் அறமும் ஒழுக்கமும் நேர்மையும் மிகுந்திருந்தன.

எனினும் தந்திரம் மிகுந்த இந்த உலகில் தமிழ் மக்களின அறமும் நேர்மையும் பலவீனமாகவே கருதப்பட்டன.

ஆம், சிங்களத் தலைவர்களை, சிங்கள மக்களை சைவப் பெருவள்ளல் சேர் பொன். இராமந்ாதன் அவர்கள் நம்பினார்.

ஆனால் அவர்கள் சேர் பொன்.இராமநாதன் செய்த நன்றியை மறந்து அவரை ஏமாற்றினர்.

இந்த ஏமாற்று வேலை அரசியலில் இராஜதந்திரம் என்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆதி முதல் இன்றுவரை நேர்மைத்தனத்துடன் வாழ்ந்து சிங்களவர்களை நம்பி நம்பி இன்றுவரை ஏமாந்துபோன ஒரே இனம் என்றால், அது நம் தமிழ் இனமாக மட்டுமே இருக்க முடியும்.

இன்றுவரை எங்களிடம் இராஜதந்திரம் இருந்ததில்லை. அவ்வாறாக இராஜதந்திரம் இருந்தால் கூட அதனை ஏதோவொரு வகையில் விமர்சனம் செய்து அதனை அறுத்துக் கொட்டி விடுகின்ற செயல்களை நாம் செய்து விடுவோம்.

இதுவே எங்களுக்கு இந்நாள்வரை விடியலைத் தரவில்லை.

உண்மையில் இராஜதந்திரம் என்பது தவிர்க்க முடியாத விடயம்.

இதனையே மகாபாரதம் நமக்குப் போதித்து நிற்கிறது.

ஆம், பாரதப் போர் ஆரம்பமாகப் போகிறது. கண்ணனிடம் உதவிகேட்டு துரியோதனனும் அருச்சுனனும் செல்கின்றனர்.

கண்ணன் சயனத்தில் இருக்கிறார். கண்ணனிடம் முதலில் சென்ற துரியோதனன் அவரின் தலைமாட்டில் இருக்க, பிந்திச் சென்ற அருச்சுனன் கால்மாட்டில் இருந்தான்.

இப்போது கண்ணன் விழித்துக் கொண்டான். அல்லது விழித்ததுபோல நடித்துக் கொண்டான்.

அருச்சுனா! என்கிறான் கண்ணன். அருச்சுனனோ தலைமாட்டில் இருக்கும் துரியோதனைக் காட்டுகிறான்.

ஓ! துரியோதனா எப்போது வந்தாய்? என்று எதுவும் தெரியாதவன் போல் கண்ணன் கேட்கிறான்.

கண்ணா! நடைபெறப்போகும் போரில் நீ எங்கள் பக்கம் இருக்க என்று இருவரும் கேட்கின்றனர்.

இது எப்படிச் சாத்தியமாகும். நான் அருச்சுனனை முதலில் கண்டதால் அவனின் கோரிக்கைக்கே முன்னுரிமை என்கிறான் கண்ணன்.

முதலில் சென்ற துரியோதனைத் தவிர்த்து விட்ட கண்ணனின் இராஜதந்திரம் இது.

அன்று கண்ணன் துரியோதனனுக்காயின், பாண்டவர்களுக்கு வெற்றி ஏது?

ஆக, இராஜதந்திரம் மிகவும் முக்கியமானது. அதனை மிக நுட்பமாகச் செய்ததாக வேண்டும். அதுவே எமது வெற்றிக்கு வித்திடும்.

# குருந்தூர் மலைக்கு சென்ற பக்தர்களை நிபந்தனையுடன் அனுமதித்த இராணுவம்

(முல்லைத்தீவு)

வடக்கினை சேர்ந்த சைவ சமய அமைப்புக்கள் நேற்று முல்லைத்தீவு குருந்தூர் மலைக்குச் சென்ற போது, அவர்களை இரண்டு மணி நேரமாக இராணுவம் விசாரணை செய்ததோடு மலையில் வழிபாடுகள் எதனையும் செய்ய முடியாது என நிபந்தனை விதித்து உள்ளே செல்ல அனுமதித்துள்ளது.

நேற்று மதியம் 1.30 மணியளவில் வடக்கிலுள்ள சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுமார் 25 பேர் குருந்தூர் மலைக்குச் சென்றுள்ளனர்.

அங்கு கடமையிலிருந்த இராணுவத்தினர், அவர்களை மலைக்குச் செல்ல அனுமதிக்க முடியாது எனத் தடைவிதித்து சுமார் இரண்டரை மணித்தியாலத்திற்கும் மேலாக, மலையடிவாரத்தில் வருகை தந்த குழுவினர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

பல்வேறு தரப்பினரையும் தொடர்பு கொண்டு பேசிய பின்னர், மலைக்குச் செல்ல இராணுவத்தினர் நிபந்தனையுடன் அனுமதி வழங்கியுள்ளனர்.

அதாவது மலையில் தேவாரம் பாடமுடியாது, பூசை செய்யமுடியாது, கற்பூரம் கொண்டு செல்ல முடியாது, பூக்கள் கொண்டு செல்ல முடியாது என நிபந்தனைகள் விதிக்கப்பட்டதோடு மலையில் ஏறும் போது "ஓம் நமசிவாய" என ஒரு பக்தர் கூறிய போது படையினர் அதற்கு அனுமதிக்காது அவ்வாறு எதுவும் சொல்ல வேண்டாம் எனத் தடைவிதித்துள்ளனர்.

வந்தவர்களை சிவசேனை அமைப்பினரா என இராணுவத்தினர் விசாரணை செய்தனர்.

அங்கு சென்றவர்கள் அதை மறுத்து, சிவசேனையினர் வரவில்லையென்றனர்.

ஊடகவியலாளர்கள் யாராவது இருக்கிறார்களா என்றும் இராணுவத்தினர் விசாரணை நடத்தினர்.

வருகை தந்த அனைவரது பெயர், அடையாள அட்டை இலக்கங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னரே அனைவரும் மலையில் ஏற அனுமதிக்கப்பட்டனர். (ம)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பருத்தித்துறை வீதி, இல.692 இல் அமைந்துள்ள சிவ குரு ஆதீன பிரிவுகள் அங்குரார்ப்பணமும் வகுப்புக்கள் ஆரம்பமும் மண்டபத் திறப்பு விழாவும் இன்று 28 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெறவுள்ளன. (5)

## தென்மராட்சியில் விபத்து; மாணவி காயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கச்சாய் பகுதியில் நேற்று புதன் கிழமை மதியம் துவிச் சக்கரவண்டியில் சென்ற பாடசாலை மாணவி ஒருவர் மினிபஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானதில் காயமடைந்துள்ளார்.

இதில் கச்சாய் பகுதியைச் சேர்ந்த 16 வயதான பாடசாலைமாணவி ஒருவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-30)

## பழைய மாணவர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல் எதிர் வரும் 30.01.2021 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் பழைய மாணவர்களை வருகை தருமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.(ம)

## மீசாலையில் விபத்து; இளைஞன் காயம்

(சாவகச்சேரி)

மீசாலை வேம்பிராய் பகுதியில் நேற்று புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

புத்தூர் வீதி ஊடாக பயணித்த மோட்டார் சைக்கிள் வீதிக்கு குறுக்கே வந்த மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளாகியபோது அவ்வீதி வழியாக வந்த பட்டாரக வாகனம் மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த புத்தூர் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 31 வயதான த.ரெஜீவ் என்ற இளைஞன் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-30)

# சத்திய தரிசனம்



## சரியான பாதையில் செல்

- நம்மைச் சுற்றியுள்ளதை கண்களால் பார்க்கிறோம். உலகைப் பார்க்க மட்டுமல்ல. வல்லமை மிக்க இறைவனைக் காண்பதற்காகவே கண்கள் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளன.
- வேகமாகப் போவது மட்டும் முக்கியம் அல்ல. சரியான பாதையில் மனிதன் செல்ல வேண்டும். அப்போது தான் போய்ச் சேர வேண்டிய இடத்துக்குப் போக முடியும்.
- அகங்காரமும், சுயநலமும் கொண்ட மனிதர்கள் கண்ணிருந்தும் பார்வையற்றவர்களாகவே வாழ்கிறார்கள்.
- நல்ல வழிகாட்டி மனசாட்சியே. அதுவே நமக்கு நல்ல எஜமானனாக இருக்கிறது.
- கடவுளை வழிபாடு செய்வதாக இருந்தால் மற்றவர்களின் நலனுக்காக மட்டும் இருக்கட்டும்.
- குழந்தைகளுக்கு அன்பு, பொறுமை, அமைதி போன்ற நல்ல குணங்களை கல்வி வழங்க வேண்டும்.
- கைமாறு கருதாமல் பிறருக்குச் செய்யும் உதவி, வாயில்லாத ஜீவன்களிடம் காட்டும் கருணை இவற்றால் கிடைக்கும் மனநிறைவே சொர்க்கம்.

# விவசாயிகளின் போராட்டத்தில் களேபரம் குடியரசு தினத்தில் இந்தியாவில் ரணகளம்







(டில்லி)

இந்தியாவின் சிங்கு எல்லையில் இருந்து புறப்பட்ட விவசாயிகளின் பேரணியில் பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டு வீச்சு மற்றும் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டதால் அங்கு பெரும்பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சிங்கு எல்லையில் இருந்து புறப்பட்ட விவசாயிகள் பேரணியை பொலிஸார் திடீரென தடுத்ததால், சலசலப்பு ஏற்பட கண்ணீர்ப்புகை குண்டுகளை பயன்படுத்தும் நிலை ஏற்பட்டதுடன் தடியடிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேளாண் சட்டங்களை எதிர்க்கும் விவசாயிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உழவு இயந்திரப் பேரணி நடத்தினர். ஆயிரக்கணக்கான விவசாயிகள் சிங்கு எல்லையில் இருந்து பேரணியை ஆரம்பித்தனர். இதற்கிடையே விவசாயிகள் பொலிஸ் பாதுகாப்பு வாகனம் மீது ஏறினர். பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளை பயன்படுத்தினர். இதனால் அந்த பகுதியில் பதற்றம் நிலவியது.

இந்நிலையில், டில்லி செங்கோட்டையை முற்றுகையிட்ட விவசாயிகள், அதில் ஏறி போராட்டம் நடத்தியதால் அங்கும் மிகவும் பதற்றமான சூழ்நிலை நிலவியது. டில்லி எல்லையில் விவசாயிகள் உழவு இயந்திரப் பேரணியை நடத்தி வருகின்றனர். அப்போது திடீரென உழவு இயந்திரத்துடன் ஒரு குழுவினர் டில்லிக்குள் நுழைந்தனர். பொலிஸார் தடுத்தும் எந்தப் பலனும் இல்லை. பொலிஸாருக்கும் விவசாயிகளுக்கும் இடையில் தள்ளு-முள்ளு ஏற்பட்டது. பொலிஸார் தடியடியும் நடத்தினர். கண்ணீர்ப்புகை குண்டும் வீசினர்.

இதற்கிடையில், விவசாயிகள் செங்கோட்டையை முற்றுகையிட்டனர். அத்துடன் செங்கோட்டையில் ஏறி போராட்டம் நடத்தினர். அதிகமானோர் செங்கோட்டையை முற்றுகையிட்டுள்ளதால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் விவசாயி ஒருவர் படுகாயம் அடைந்து உயிரிழந்துள்ளார். (நி)

## கொரோனா வைரஸ் தாக்கம்

## இன்னும் 5 ஆண்டுகளுக்கு நீடிக்கலாம்

**(சிங்கப்பூர்)**

**கொரோனா வைரஸின் தாக்கம் அடுத்த 4 முதல் 5 ஆண்டுகள் வரை நீடிக்கலாம் என சிங்கப்பூரின் கல்வித்துறை அமைச்சர் லாரன்ஸ் வாங் எச்சரித்துள்ளார்.**

நிகழ்ச்சி ஒன்றில் பேசிய லாரன்ஸ் வாங், 'கொரோனா பிரச்சினை முடிந்த பிறகு உலகம் எவ்வாறு இருக்கும் என்பதை யாராலும் கணிக்க முடியாது என்றும் வரும் ஆண்டுகளில் சமூகம் கொரோனா வைரஸ் தாக்கத்தால் எந்த மாதிரியாக வடிவமைக்கப்படும் என்பதில் இன்னும் மிகப்பெரிய நிச்சயமற்ற சூழல் நிலவுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

இதையெல்லாம் விட, கொரோனா தடுப்பூசி படிப்படியாக சர்வதேச அளவில் மறு தொடக்கம் ஆகியுள்ளது. ஆனால், உலகம் முழுவதும் தடுப்பூசி எடுத்துக்கொள்வது உடனடியாகவோ எளிதாகவோ இருக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாஸ்க் அணிந்து கொள்வது, கூட்டங்களை தவிர்ப்பது போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் இந்த ஆண்டும் தொடரும் என்றும் அடுத்த ஆண்டும் தொடரலாம் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

## மலைக்குன்றிலிருந்து கவிழ்ந்த பேருந்து 19 பயணிகள் ஸ்தலத்தில் உயிரிழப்பு

(பிரேசிலியா)

பிரேசில் நாட்டில் பேருந்தொன்று மலைக்குன்றில் இருந்து கீழே விழுந்து விபத்துக்குள்ளானதில் 19 பயணிகள் உயிரிழந்தனர்.

பரானா மாகாணத்தில் 53 பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த பேருந்து, திடீரென நிலைதடுமாறி அருகில் இருந்த மலைக்குன்றில் இருந்து கீழே விழுந்து விபத்துக்குள்ளானது.



இதில் பேருந்தில் பயணம் செய்த 19 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அதோடு, பலர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதனையடுத்து, இந்த விபத்து குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில், சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (நி)

## மூன்றாம் பாலினத்தவர்களுக்கு பணியாற்ற மீண்டும் அனுமதி

### ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் பிடன்

(வோஷிங்கடன்)

அமெரிக்க இராணுவத்தில் மூன்றாம் பாலினத்தவர்கள் பணியாற்ற மீண்டும் அனுமதியளிக்கும் ஒப்பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் கையெழுத்திட்டுள்ளார்.

2016 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியாக இருந்த பராக் ஒபாமா, மூன்றாம் பாலினத்தவர்கள் இராணுவத்தில் சேர வழிவகை செய்தார்.

ஒபாமாவின் இந்த உத்தரவை பின்னர் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் நீக்கினார்.

தற்போது மீண்டும் ட்ரம்ப் விதித்த தடையை நீக்கி, அமெரிக்க இராணுவத்தில் மூன்றாம் பாலினத்தவர்கள் பணியாற்ற ஜோ பிடன் கையெழுத்திட்டுள்ளார். (நி)

## பூங்காவை அடகு வைக்கும் பாகிஸ்தான்?

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பொருளாதாரத்தை சரிவில் இருந்து மீட்க, அந்தநாட்டின் மிகப் பெரிய பூங்காவை 50 ஆயிரம் கோடி பாகிஸ்தான் ரூபாய்க்கு அடகு வைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

எஃப்-9 பூங்கா, மதர்-இ-மில்லத் பாத்திமா ஜின்னாவின் பெயரிடப்பட்டது. இது பாகிஸ்தானில் உள்ள மிகப்பெரிய பசுமையான பூங்காக்களில் ஒன்றென்பதுவும் குறிப்பிடதக்கது. (நி)

## நான்கு ஆண்டுகள் சிறைவாசம் முடிந்து விடுதலையானார் சசிகலா



(பெங்களூர்)

4 ஆண்டுகள் சிறைத்தண்டனை முடிந்து சசிகலா நேற்று விடுதலையானார்.

சொத்து குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டு இருந்த சசிகலா கொரோனாவால் பாதிக்கப்பட்டு அங்குள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தற்போதைய நிலையில் அவருக்கு கொரோனா பாதிப்புகள் முற்றிலுமாக நீங்கி விட்டது.

இதையடுத்து அவரை தீவிர சிகிச்சை பிரிவில் இருந்து சாதாரண விடுதிக்கு மருத்துவர்கள் மாற்றியுள்ளனர். கொரோனா வழிகாட்டுதல்படி சசிகலாவுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை முடிந்து சசிகலா நேற்று விடுதலையானார். சிறையில் இருந்து விடுதலை ஆனதற்கான உத்தரவு மருத்துவமனையில் சசிகலாவிடம் வழங்கப்பட்டது.

சிறைவாசம் முடிந்தாலும் சசிகலா விக்டோரியா அரசு மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெறுவார். (நி-4)

## அத்துமீறும்...

மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள கடற்றொழில், நீரியல் வளத் திணைக்கள முன்றலில் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் ஆரம்பமான பேரணி யாழ்ப்பாணம் மாநகரம் ஊடாக ஸ்ரான்லி வீதியில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தை வந்தடைந்தது.

அங்கு போராட்டக்காரர்கள் தமது கோரிக்கை மனுவை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழ்.மாநகர...

களால் நிறைவேற்றப்பட்டது. 26 வாக்குகள் ஆதரவாகவும் எதிராக 3 வாக்குகளும் வழங்கப்பட்டன. 15 பேர் நடுநிலை வகித்தனர். முன்னாள் முதல்வர் ஆனல்ட் சபைக்கு சமுகமளிக்கவில்லை.

முன்னாள் முதல்வர் இ.ஆனல்ட் சமர்ப்பித்த 2021ஆம் ஆண்டுக்கான பாதீடு இரண்டு முறை தோல்வியடைந்திருந்தது.

அதனால் அவர் பதவியிழந்ததால் டிசம்பர் 30ஆம் திகதி நடத்தப்பட்ட தெரிவில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் முதல்வராகத் தெரிவானார்.

நேற்றைய வாக்கெடுப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பெரும்பாலோனோர் நடுநிலை வகித்தனர்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 3 உறுப்பினர்கள் எதிராகவும் 10 உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்தனர்.

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் 10 உறுப்பினர்களும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ஆதரவாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவரும் ஆதரவாக வாக்களித்தனர். (ம-33)

## வட மாகாணத்தில்...

செய்யப்பட்டன.

இதில், யாழ் மாவட்டம் 3 பேர், கிளிநொச்சி மாவட்டம் ஒருவர், முல்லைத்தீவு மாவட் டம் 5 பேர், மன்னார் மாவட்டம் 6 பேர், வவுனியா 16 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். (ம-18)

## முல்லைத்தீவில்...

கினை விற்பனைக்காகக் கொண்டு வந்த நிலையிலேயே வத்தளையைச் சேர்ந்த இருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் விசாரணைகளை மேற்கொண்ட விசேட அதிரடிப் படையினர் சந்தேகநபர்களையும் வலம்புரிச் சங்கையும் முல்லைத்தீவு பொலிஸாரிடம்ஒப்படைத்துள்ளனர். (ம-281)

## பூசகர் உட்பட...

பட்ட வழக்கில் சந்தேகத்தின் பேரில் கடந்த 22ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆலய பூசகர் உட்பட மூவரும் நேற்று வவுனியா நீதவான் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

தொல்பொருள் சின்னங்களை சேதப்படுத்தியதாக தொல்பொருள் திணைக்களத்தினால் ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் ஆஜராகவில்லை என தெரிவித்து கடந்த 22ஆம் திகதி வழக்கில் ஆஜராகியிருந்த பூசகர் உட்பட மூவரையும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று நீதிமன்றுக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சந்தேகநபர்களை நீதவான் பிணையில் செல்ல அனுமதிவழங்கினார். (ம-299)

## தமிழரின் வழி...

னைப் பதிவு செய்துள்ளார்.

அதேவேளை காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் மீண்டும் அவ்விடத்தில் நிறுவ வேண்டும் எனவும், தொடர்ந்தும் தமிழ் மக்கள் குருந்தூர் மலைக்குச் சென்று தமது வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் எனவும் ரவிகரன் குறித்த முறைப்பாட்டினூடாக கோரியுள்ளார். (ம-281)

## குருந்தூர் மலை...

சிவஞானம் சிறீதரன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ.வேளமாலிகிதன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், பிரதேச சபை உறுப்பினர்களான சிலோகேஸ்வரன், த.றமேஷ், ச.ஜீவராசா உள்ளிட்ட குழுவினர் முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலை நிலைவரங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவும், வழிபாடு செய்வதற்காகவும் நேற்று சென்றிருந்தனர்.

அப்போது அங்கிருந்த இராணுவத்தினர், தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் சென்ற வாகன இலங்கங்களைப் பதிவு செய்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டிருந்தனர். (ம-281)

## கொரோனாத்...

எண்ணிக்கை 290ஆக அதிகரித்துள்ளது.

மேலும் நாட்டில் நேற்றும் +772 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய இலங்கையில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 60 ஆயிரத்து 694 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## கொரோனா தடுப்...

எந்தவொரு நபரும் கோவிட்-19 தடுப்பூசியை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட மாட்டார்கள் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகரும் இலங்கையின் கோவிட் - 19 தடுப்பூசி இயக்கத்துக்கான ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவருமான லலித் வீரதுங்க, தடுப்பூசியை பெற்றுக் கொள்வதில் மக்கள் விருப்பமான தேர்வு செய்ய அனுமதிக்கப்படுவார்கள். விருப்பமானவர்கள் மட்டுமே தடுப்பூசியை பெற்றுக் கொள்வார்கள்.

தடுப்பூசியை பெறுபவர்கள் ஒரு படிவத்தில் கையெழுத்திடுமாறு கோரப்படுவார்கள் என்று லலித் வீரதுங்க கூறினார். (ம)

## வவுனியாவில்...

நேற்றைய தினம் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்ட ஒருவருக்கு இரு நாட்களுக்கு முன் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்ட ஏனையவர்களிற்கு பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு முடிவுகள் நேற்றையதினம் வெளியாகியிருந்தன.

இதன் அடிப்படையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்ட 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம)

## சர்வ...

ஜெனிவாவில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின்46 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான அறிக்கையொன்றை மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் சமர்ப்பிக்கவிருக்கிறார்.

அவ்வறிக்கையில் சுமார் 37 வருடங்களாக நடைபெற்ற போரின் இறுதிக் கட்டத்தில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான பொதுமக்களுக்கான நீதியை உறுதி செய்வதற்குத் தவறியுள்ளமை தொடர்பில் அவர் இலங்கை மீது குற்றஞ் சுமத்தியுள்ளார்.

அதுமாத்திரமன்றி பொறுப்புக் கூறலையும் நல்லிணக்கத்தையும் உறுதி செய்வதற்காக முன்னெடுக்கப்பட்ட உள்ளகப் பொறிமுறைகள் அவற்றுக்கான சிறந்த தீர்வைப் பெற்றுத் தருவதற்குத் தொடர்ந்தும் தவறியிருப்பதுடன், தண்டனைகளிலிருந்து தப்பிப்பதற்கான வாய்ப்புக்களை மேலும் அதிகரித்திருக்கிறது என்றும் மிச்சேல் பச்லெட் சுட்டிக் காட்டியிருப்பதாக சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக முன்னைய நிர்வாகங்களினால் மேற்கொள்ளப்பட்ட சில முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் தற்போதைய கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் நிறுத்தியிருக்கிறது என்றும் ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள், விமர்சகர்கள் மீதான கண்காணிப்புக்களும் சுயதணிக்கைக்கான அவசியமும் அதிகரித்திருப்பதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ம)

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 27.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2675
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 09 23 29 77
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27/01/2021 சீட்டிழுப்பு இலக்கம் 1091
வெற்றி இலக்கங்கள் 0 6 8 7 8 5 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.01.27
சீட்டிழுப்பு இலக்கம் - 417
R 20 40 54 76
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

மஹஜன சம்பத
திகதி 2021/01/27
சீட்டிழுப்பு இலக்கம் 4380
ஆங்கில எழுத்து வெற்றிபெற்ற இலக்கங்கள்
J 8 9 5 4 3 2
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0747
V 18 30 40 41 68

சீட்டிழுப்பு வாரம் 047
சீட்டிழுப்பு திகதி 27.01.2021
வெற்றி இலக்கங்கள் 03 08 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 23,15,600/=

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1176
சீட்டிழுப்பு திகதி: 27.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 102,841,575
வெற்றி இலக்கங்கள் 41 46 74 77 C

சனிதா
சீட்டிழுப்பு இல: 3506
சீட்டிழுப்பு திகதி: 27.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 42,416,959
வெற்றி இலக்கங்கள் 03 31 45 70 E

ராசி
சுப்பர் ஜக்பொட் 3,371,405/=
திகதி: 27.01.2021
வெற்றி வாரம்: 3057
வர்ணம்: பச்சை
வெற்றி இலக்கங்கள் 07 46 59 61 சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,774,080

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1350 நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 27/01/2021 தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் C 23 24 57 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் 65,557,437/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1728
சீட்டிழுப்பு திகதி 27.01.2021
வெற்றி இலக்கங்கள் 04 27 40 60 W
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 21,000,928
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

## காணி விற்பனைக்கு

யாழ். பிறவுண் வீதி,
கல்வாரி சேர்ச் அருகில் 5 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

(5428)

**076 702 3565**

## காணி விற்பனைக்கு

கொக்குவில், பிரம்படி 2 ஆம்
ஒழுங்கையில் 2 1/2 பரப்புக் காணி
வெட்டுக்கிணற்றுடன் விற்பனைக்கு
உண்டு.

(5428)

**076 702 3565**

## FALC FRENCH LANGUAGE CENTRE

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட
பிரெஞ்ச் Classes
V. Jegan(Trained in France)

(C-1288)

19 பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781

23/2, சோமசுந்தரம் அவெனியு.
சுண்டிக்குளி. 0779789456
நசேரி Fuel Station அண்மையில்

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1,
Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கோண்டாவில்
கிழக்கு, பழனி ஆண்டவர்
கோவில் அருகாமையில்
4 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

**2 பரப்பாகப் பிரித்துக்
கொடுக்கப்படும்.**
**( தரகர் தேவையில்லை.)**

(5434)

**குரு - 077 805 1655**
**076 640 0974**
**077 596 3845**

## மருந்தாளர் ( PHARMACIST ) தேவை

மருந்தகம் ஒன்றிற்கு
மருந்தாளர்
( PHARMACIST ) தேவை.

(5423)

**070 185 6968**


## திருமலையிலிருந்து யாழ். வந்தவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அடையாளம் காணப்பட்ட நபர் திருகோணமலையிலிருந்து நேற்று முன்தினம் வந்த போது, தென்மராட்சிப் பகுதியில் வீதியில் மறித்து அவரிடம் இருந்து பிசிஆர் மாதிரிகள் பெறப்பட்டிருந்தன.

நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த நபர், யாழ்ப்பாணத்திலும் வட்டுக்கோட்டையிலும் சில வீடுகளுக்கு சென்று திரும்பியிருப்பதாக திருகோணமலையில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு தகவல் வழங்கியிருப்பதாகவும் குறித்த நபர் வந்து சென்ற வீடுகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளை பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் முன்னெடுத்து வருவதாகவும் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெவித்தார். (ம)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

## ENGLISH CLASSES

**ஆங்கில வகுப்புகள்**

தரம் 6-11 வரையான வகுப்புக்களுக்குரிய
ஆங்கில வகுப்புகள்
(Grammar, Reading, Writting & Speaking)
குழுவாகவும் தனியாகவும்
கற்பிக்கப்படும்.

(5427)

**076 217 6366**

## GROUP & PERSONAL CLASS

**தரம் 6, 7, 8 இற்கான
தமிழ், ஆங்கில மொழிமூல
வகுப்புக்கள்.**

ஆரம்பம் : 01.02.2021
திங்கள் 4.00 P.M

(5415)

**077 667 9544, 076 343 2521**
**No.123/2, Temple Road, Jaffna.**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1167)

**0768226240** DHL

## பெண் உதவியாளர் தேவை

புலோலிப் பகுதியில் வயோதிபப் பெண்
ஒருவரை பராமரிக்க
பெண் உதவியாளர் தேவை.
**( சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். )**

(C-1289)

**077 651 0227**

## HIGH LOOKS

INTERNATIONAL ACADEMY FOR COSMETOLOGY
Approved centre by Tertiary & Vocational Education Commission
TVEC Approved Certificate

வழங்கப்படும் கற்கைநெறிகள்

கொழும்பு, திருகோணமலை,
யாழ்ப்பாணம், மன்னார்,
வவுனியா, முல்லைத்தீவு,
கிளிநொச்சி கிளைகளில்



**IVQ** Level -2
**NVQ** Level -3, Level -4,
Level -5, Level -6

## DIVINE LOTUS

**அழகு நிலையம்**

உயர் தொழில்நுட்ப சேவைகள்
மாங்கையர்களுக்கான பயன் உள்ள
சேவைகள், பயிற்சிகள்.

**மணப்பெண் அலங்காரம்,
பேசியல், கேக் ஐசிங், தையல்,
ஆரிவேக்.**

ஆர்வம் உள்ளவர்களுக்கு
முன்னுரிமை, சலுகைகள் உண்டு.

(5386)

**55, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.**
(யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அருகில்)
**021 222 4240, 077 601 8563**
விபரங்களுக்கு நேரில் வரவும்.


## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
20.01.1962

விண்ணில்
26.01.2013

அமரர்
**செல்வமலர் சற்குணராசா**

ஆண்டுகள் ஓடி மறைந்ததம்மா – உன்
அழகிய முகம் மறைந்திடுமா?
வாழ்வினை எமக்குப் புரிய வைத்தாய்
எமை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டீர்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

இல. 23, 6 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(5430)

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்


## காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்

UNION ASSURANCE
A JOHN KEELLS COMPANY

தொடர்ந்து 8 வருடங்கள் வேலை செய்வதற்கு
மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) என்ற விருதினைப் பெற்ற
யூனியன் அஷ்யூரன்ஸ் இடமிருந்து தொழில் வாய்ப்புகள்
யாழ்.பிராந்தியம்

### விற்பனை முகாமையாளர்

- க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி.
- அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 4 கொடுப்பனவுகள் + மேலும் பல நன்மைகள்.

### உதவி விற்பனை முகாமையாளர்

- க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி.
- அடிப்படை கொடுப்பனவு 15,000/= + மேலதிக 4 கொடுப்பனவுகள் + மேலும் பல நன்மைகள்.

### நிதி திட்டமிடல் ஆலோசகர்

- க.பொ.த (சா/த) 6 பாடங்களில் சித்தி. (கணிதம், தமிழ் உட்பட)
- 4 வகையான கொடுப்பனவுகள் + மேலதிக பல நன்மைகள்.



(நிபந்தனைகளுக்கு உட்பட்டது.)

(C-1275)

உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை 10.02.2021 இற்கு
முன்னர் sellaiyakiritharan89@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

218, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.